# விவிலிய வினாடி வினா

## சரியான விடைகளை எழுதியவர்கள்

**அருட்சகோதரிகள்**

லூர்து மேரி, மேரி செசாரியா - சென்னை, ஜோஸ்பிட்டா மேரி, எதெல்பெர்கா, வில்சன் மேரி, ஜெசிந்தா ஆரோக்கிய மேரி- திருச்சி, ஜெரின் மேரி - திண்டுக்கல், ஜீலி எலிசபெத், மேரி மௌரிஸ், ஜூ லியானா- தஞ்சாவூர், மார்சலோசா மேரி - தூத்துக்குடி, அருள் மேரி, லூக்காஸ் மேரி, அனன்சியா மேரி, பிலோமினாள், டோம்னா மேரி, டோனட்டெல்லா அனஸ்த்தாசியாள், ஜார்லத் புஷ்பா, டோன்போஸ்கோ மேரி, பவுலின் மேரி- கும்பகோணம், சலேத் மேரி - திருப்பூர், புஷ்பா மேரி - காரைக்குடி, ரூபெல்லா மேரி, வித்யா மேரி, பிரேமா - திருநெல்வேலி, அப்போலின்- மதுரை, புஷ்பம் - சிந்தாமணி, அருள் சீலி - முட்டம், சகாயம் - கடலூர், றோஸ்லினா - சிவகங்கை, குழந்தை தெரஸ் - சேலம்.

**பொதுநிலையினர்**

பிரான்சிஸ் பேசில், மேரி மார்கரேட், ஆனி பீட்டர் ராஜ், கிளாரா லூர்து மேரி, அனிருத் ஜோஸ்வா, இமாக்குலேட் சோபியா, சந்தனம், லீமா தெரஸ், ஞானசேகரன், நான்சி பியூலா - திருச்சி; லீலாவதி, அமல செல்வி, இருதய விஜிலா,மார்கிரேட் பெல்சியா,ஜோஸ்பின் மேரி திண்டுக்கல்; மேரி - இளையரசனேந்தல்; சிப்ரியான் - தெளி; ததேயுஸ் கரோலின் - திருப்பூர், மைக்கேல்சாமி, புஷ்பக்கண்ணு - கோயம்பத்தூர், வியாகுல மேரி - சென்னை, மரிய பிரகாசம் - தர்மபுரி

## குலுக்கல் முறையில் பரிசு பெறுபவர்கள்



அருட்சகோதரி. ஜெரின் மேரி - திண்டுக்கல்
திரு. மரிய பிரகாசம் - தர்மபுரி

**Owned and Published by THE ORDER OF SERVANTS OF MARY from Jyothi Matha Alayam. 5/301 Matha Koil Street, Rajiv Gandhi Road, Okkiampet, Chennai – 600 097 and Printed by M. RAJA REGAN at Devan Press, Old No.138/1, New No.158/1, Venkatachala Mudali Street, Royapettah, Chennai – 600 014.**
**Editor: Fr. R.M. UGIN WINNER OSM.**







# முப்பெரும் விழா

## பதிப்பாசிரியர் பக்கம்


ற.ம. யூஜின் வின்னர் ம.ஊ.ச

ஆகட்டும் இதழின் வாசகர்களே அன்னை மரியின் பக்தர்களே, ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை அன்னை மரியாளுக்கு எத்தனையோ திருவிழாக்களைக் கொண்டாடுகின்றோம். இந்த செப்டம்பர் மாதம் அன்னை மரியாவுக்கு மிகவும் சிறப்பு வாய்ந்த மாதமாக இருக்கின்றது. ஆம் இந்த மாதத்தில் நாம் அன்னை மரியாவுக்கு மூன்று விழாக்களைக் கொண்டாடுகின்றோம்.


1. **செப்டம்பர் 8 அன்னை மரியாவின் பிறப்பு**
2. **செப்டம்பர் 12 அன்னையின் தூய்மைமிகு பெயர்**
3. **செப்டம்பர் 15 அன்னையின் வியாகுலங்கள்**

**அன்னை மரியாவின் பிறப்பு**

நம்முடைய கத்தோலிக்க திருஅவையானது மூன்றே மூன்று பேருடைய பிறப்பைத்தான் திருவிழாவாகக் கொண்டாடுகின்றது. கத்தோலிக்க திருஅவையில் எத்தனையோ புனிதர்கள் இருந்தாலும் அவர்களுடைய பிறந்தநாளை திருவிழாவாகக் கொண்டாடுவது கிடையாது புனிதர்களுடைய இறந்த நாளைத்தான் திருவிழாவாக கொண்டாடுவோம். காரணம், புனிதர்கள் மண்ணில் இறந்த நாள்தான் விண்ணில் பிறந்தநாள்.



## உள்ளே




| | |
|---|---|
| கதையினில் கலந்த மரியா | - 05 |
| விரைந்து செல்லும் மரியா | - 06 |
| அன்னையின் திருத்தலங்களை நோக்கி | - 09 |
| விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி | - 14 |
| வங்கக் கரையோரம் | - 16 |
| ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன் | - 17 |
| மரியின் ஊழியர்சபையின் புனிதம் | - 24 |
| மரியா - கடவுளின் கடிதம் | - 25 |
| பொதுநிலையினரின் பார்வையில் மரியா | - 28 |
| நல்லாசிரியர் இயேசு | - 30 |
| ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி | - 32 |

திருஅவை கொண்டாடும் மூன்று பிறந்தநாட்கள் ஆண்டவர் இயேசுவின் பிறந்தநாள், அன்னை மரியாவின் பிறந்தநாள் மற்றும் திருமுழுக்கு யோவானின் பிறந்தநாள்.

ஏன் திருஅவை இவர்கள் மூன்று பேரின் பிறந்தநாட்களைக் கொண்டாடுகின்றதென்றால் இவர்கள் மூன்று பேருமே ஜென்ம பாவமில்லாமல் பிறந்தவர்கள், இவர்கள் மூன்று பேருமே உறவினர்கள், இவர்கள் மூன்று பேருமே மீட்புத் திட்டத்தில் மிக முக்கிய பங்காற்றியவர்கள்.

ஆண்டவர் இயேசு ஜென்மப் பவாமில்லாமல் பிறக்க வேண்டுமென்றால் அவருடைய தாயான அன்னை மரியாளும் ஜென்மப் பாவமில்லாமல் பிறக்க வேண்டும். ஆண்டவர் இயேசு ஜென்மப் பவாமில்லாமல் பிறக்க வேண்டுமென்றால் அவருக்காக பாதையைச் செம்மைப்படுத்திய திருமுழுக்கு யோவானும் ஜென்மப் பாவமில்லாமல் பிறக்க வேண்டும். இந்த மூன்று பேரின் பிறப்பும் ஒரு அதிசய பிறப்புதான்.

**அன்னையின் தூய்மைமிகு பெயர்**

பெயர் என்பது ஒவ்வொரு மனிதனின் அடையாளம். நாம் ஒருவரை பெயர் சொல்லி அழைக்கும்போது நாம் அவருக்கு மிக நெருக்கமானவராக மாறுகின்றோம். அன்னையின் தூய்மைமிகு பெயர் திருவிழாவைக் கொண்டாடும் கத்தோலிக்க கிறிஸ்தவர்களாகிய நாம், இயேசு என்னும் பெயரை உச்சரிக்கும் அளவுக்கு அன்னையின் பெயரையும் உச்சரிக்கின்றோம்.

அன்னை மரியாவின் பெயர் ஏன் தூயதென்றால் கபிரியேல் தூதர் அன்னை மரியாவிடம் பேசும்போது இயேசு என்னும் பெயருக்கு ஒரு சில விளக்கங்களைக் கொடுப்பார். அவர் பெரியவராயிருப்பார், உன்னத கடவுளின் மகன் எனப்படுவார் என்று இயேசு என்னும் பெயரை மகிமைப்படுத்துவார்.

அதேபோல் அன்னை மரியாவுக்குத் தோன்றியதும் அவர் சொன்ன வார்த்தை, "அருள் நிறைந்த மரியே வாழ்க, ஆண்டவர் உம்முடனே" என்று அன்னை மரியாவின் பெயரையும் மகிமைப்புடுத்துகின்றார். ஆகவே, அன்னை மரியாவின் பெயர் தூய்மைமிகுந்ததாக இருக்கின்றது.

**அன்னை மரியாவின் வியாகுலங்கள்**

அன்னை மரியாவின் பிறப்பு விழாவும் தூய்மைமிகு பெயர் விழாவும் மகிழ்ச்சியின் விழாக்களாக இருக்கின்றன. ஆனால் அன்னையின் வியாகுலங்கள் என்பது துயரத்தின் விழாவாக இருக்கின்றது. அன்னையின் வாழ்க்கையில் வெறும் ஏழு வியாகுலங்கள் மட்டுமா இருந்தனவென்றாவல் இல்லை பல ஆயிரம் வியாகுலங்கள் இருந்தன. அத்தனை வியாகுலங்களைத் தாங்கிக் கொண்டுதான் அன்னை மரியாள் சிறந்த தாயாக, சீடராக இருந்தார்.

**வியாகுலங்கள் நம்மை சிதைப்பதற்கு அல்ல மாறாக நம்மை செதுக்குவதற்கு ஆகட்டும்**





விண்ணப்பத்தைக் கேட்டு அன்னை மழலை வரம் தந்தார். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**ஜெனிபர்**

என் மகனுக்கு திருமணம் முடிந்து 2 வருட காலமாக குழந்தை இல்லை நான் மாதாவிடம் விண்ணப்பித்தேன். மழலை வரம் கிடைத்தது. மேலும் வீடு கட்டுவதற்கு நிறைய சவால்கள் இருந்தது. நான் கண்ணீரோடு மாதாவிடம் ஜெபித்தேன். சுமூகமாக முடித்துக் கொடுத்தார். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**ரூபன், மோனிகா – சோழிங்கநல்லூர்**

என் மனைவியின் பிரசவத்திற்காக நாங்கள் மாமியார் வீடு வந்திருந்தோம். பிரசவவேளை நெருங்கியதும் மருத்துவமனையில் அனுமதித்தோம். குழந்தை பிறந்த பிறகும் குழந்தையை எங்களிடம் கொடுக்காமல் தொடர்ந்து மருத்துவமனையில் சிகிச்சைப் பிரிவில் வைத்திருந்தார்கள். நான் ஜீவ மாதாவிடம் ஜெபம் செய்தேன். எந்த ஒரு ஆபத்தும் இல்லாமல் குழந்தையைக் காப்பாற்றியதற்காக கோடான கோடி நன்றி. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!



## நாஞ்சிக்கோட்டை ஜீவ மாதா இல்லத்தின் சாட்சிகள்

**ஆ. ஆரோக்கிய ஜான்சி, விள்ளையர் நத்தம், தஞ்சாவூர்**

எனக்கு திருமணமாகி நான்கு வருடங்கள் கடந்தன. இருப்பினும் குழந்தையின்றி பல சிகிச்சைகள் மேற்கொண்டோம். பல கோவில்களுக்கு சென்றோம். குழந்தையின்றி தவித்து வாழ்வை வெறுத்தோம். அப்பொழுது ஒரு குருவானவர் மூலம் ஜீவ மாதாவின் உருவம் கொண்ட படத்தினை பெற்றேன். தஞ்சாவூர் நாஞ்சிக்கோட்டையில் உள்ள ஜீவ மாதா இல்லத்திற்கு சென்று செபித்தோம். அன்னையின் மகிமையை உணர்ந்தேன், கருதரித்து ஜீவ மாதாவே எனக்கு குழந்தையாக பிறந்தாள். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

ஆகட்டும்



# ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி

திருமதி. மேரி ஜீவா
சோழிங்கநல்லூர், சென்னை

ஆகஸ்டு மாதம் 5 ஆம் தேதி மாதத்தின் முதல் சனிக்கிழமை. ஜீவ மாதாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட நாள். பக்தர்கள் கூட்டம் சற்று அதிகமாகவே காணப்பட்டது. வந்திருந்த அனைத்து மக்களும் பக்தியோடு செபமாலை, குணமளிக்கும் நற்கருணை ஆராதனை, சாட்சியப் பகிர்வு, திருப்பலி என்று அனைத்து திருவழிபாட்டு நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு இறையாசியை அன்னையின் பரிந்துரை வழியாக வேண்டினர். மேலும் அவர்கள் கூறிய சாட்சியங்கள் பலரது வாழ்வில் நம்பிக்கை ஒளியை பிரகாசிக்க வைத்திருக்கின்றது. அந்த சாட்சியப் பகிர்வுகள் இதோ உங்களுக்காக:

**ஜெனிபர் – ஈஞ்சம்பாக்கம்**

என் தங்கைக்கு மணமுடித்து வெகு காலமாக குழந்தைப்பேறு இல்லாமல் இருந்தது. நான் மாதாவிடம் ஜெபம் செய்தேன். அதே போன்று நான் விண்ணப்பித்த அடுத்த மாதமே என் தங்கையின் வயிற்றில் குழந்தை நின்றது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**சரவணன்**

எனக்கு திருமணம் ஆகி 2 வருடங்கள் ஆகிறது. குழந்தை வரம் இல்லை. சோழிங்கநல்லூரில் இருக்கும் கருவுற்ற மாதாவிடம் விண்ணப்பம் செய்யுங்கள் என்று நண்பர் ஒருவர் சொன்னதால் நாங்களும் மாதாவிடம் மன்றாடினோம். மழலை வரம் கிடைத்தது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**மேரி ஜெயசீலி**

எனக்கு உடம்பெல்லாம் ஒரே வலியாக இருந்தது. ECG எடுத்து பார்த்தோம். ஒன்றுமில்லை என்றார்கள். நான் மாதாவிடம் மன்றாடினேன். எனக்கு நற்சுகம் கிடைத்தது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**பெட்ரீசியா**

எனக்கு திருமணம் முடிந்து 12 வருடங்களாக குழந்தை இல்லை. நான் நம்பிக்கையோடு மாதாவிடம் மன்றாடினேன். என்





# கதையினில் கலந்த மரியா

அருள்பணி. ஆன்றணி ஷாஜி ம.ஊ.ச



ஓர் ஊரில் பண்ணையார் ஒருவர் இருந்தார். அவரது வீட்டில் தொழிலாளி ஒருவர் தினமும் விறகு பிளக்கும் வேலையை செய்து வந்தார். இவர் ஒவ்வொருமுறை கோடாரியை போடும்போதும் சத்தமாக "ஓ ஆதாமே ஓ ஏவாளே" என்று மாறிமாறி சொல்லிக் கொண்டே விறகினைப் பிளந்தார். நீண்ட நாட்களாக இதை கவனித்து வந்த பண்ணையார் ஏன் இவ்வாறு சொல்கிறாய்? என்று கேட்டார். அதற்கு அவர் பின்ன என்ன எஜமான் இந்த ஆதாம் ஏவாள் மட்டும் கடவுள் சாப்பிடக் கூடாதுன்னு சொன்ன பழத்தை சாப்பிடாம பாவம் செய்யாம இருந்திருந்தா நான் இப்படி கஷ்டப்பட தேவையில்லை மகிழ்ச்சியாக இருந்திருப்பேன் என்று கூறினார். பண்ணையார் சிரித்துக் கொண்டே இவருக்கு ஒரு பாடம் புகட்ட வேண்டும் என்று நினைத்தார்.

சில நாட்களுக்கு பிறகு பண்ணையார் அந்த தொழிலாளியை அழைத்து நான் வெளியூர் செல்கிறேன் திரும்பிவர ஒரு வாரமாகும் அதுவரை நீ என் பங்களாவிலேயே தங்கிக்கொள் எல்லா வசதிகளும் இங்கே உள்ளன. உன் விருப்பம்போல் இருக்கலாம். ஆனால் ஒரு நிபந்தனை வீட்டின் ஒரு கூடையை கவிழ்த்து வைத்துள்ளேன் இதைமட்டும் நீ திறந்து பார்க்கக் கூடாது என்றார். நான் விசுவாசமாக இருப்பேன், நிபந்தனையை மீறமாட்டேன் என்று சொன்னார் அந்த தொழிலாளி. நான்கு நாட்கள் கழித்து ஐந்தாம் நாள் அந்த கூடைக்குள் அப்படி என்னதான் இருக்கும் திறந்து பார்த்து விடலாம் என்று அந்த கூடைக்கு அருகில் சென்றார் மனமாறி திரும்பி வந்துவிட்டார். அடுத்த நாள் இந்த எண்ணம் அதிகமாக தோன்றவே கூடையைத் தொட்டார். ஆனால் திரும்பி வந்துவிட்டார். கடைசிநாள் முதலாளி வருகிற நேரம் வந்துவிட்டது, சரி திறந்து பார்த்துவிடுவோம் என்று கூடையை திறந்தார். உள்ளே இருந்த சிட்டுக்குருவி பறந்துவிட்டது. இவருக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. பண்ணையார் வந்தார் தொழிலாளியிடம் நலம் விசாரித்தார். அவரின் முகம் வாடியிருந்ததைக் கண்டு என்ன சோகம் கூடையை திறந்து பார்த்தாயா? என்று கேட்டார். ஆம் என்று பயத்தோடு தலையை ஆட்டினார் தொழிலாளி. உன்னால் ஒருவாரம்கூட தாக்குபிடிக்கமுடியவில்லை நீ ஆதாம் ஏவாளை குறைகூறுகிறாயா? என்றார் பண்ணையார்.

ஆதாம் ஏவாளின் பாவக்கயிற்றை அறுக்க பிறந்தவர்தான் அன்னை மரியாள். செப்டம்பர் 8 ம் நாள் கன்னி மரியாவின் பிறந்த நாளைக் கொண்டாடுகிறோம். ஒவ்வொரு பிறப்பும் இவ்வுலகில் ஒரு புதிய நம்பிக்கையைக் கொடுக்கிறது. அன்னை மரியாளின் பிறப்போ கிறிஸ்துவில் நாம் அனைவரும் புதுபடைப்பாவோம் என்ற நம்பிக்கையின் முதற்புள்ளியாக அமைகிறது. இந்த விழா தெற்கு பாலஸ்தீனத்தில் தொடங்கியதாக சொல்லப்படுகின்றது. எருசலேமில் புனித அன்னம்மாளின் இல்லம் இருந்ததாக கூறப்படும் இடத்தில் 5-ம் நூற்றாண்டில் எழுந்த பேராலயத்தின் அபிஷேக நாளே அன்னையின் பிறந்த நாளாக செப் 8-ல் கொண்டாடப்படுகிறது. புனித பொனவெந்தூர் வானத்தைவிட பெரியதொன்றை கடவுள் படைக்க முடியும் ஆனால் மரியாளைவிட பெரியவரை படைக்க முடியாது என்று கூறுகின்றார். தாயைப்போல பிள்ளை நூலைப்போல சேலை என்பார்கள். அன்னையின் பிறப்பு விழாவினைக் கொண்டாடும் நாம் தூயவாழ்வை மேற்கொள்ள அழைக்கப்படுகிறோம். அன்னையின் நற்பண்புகளை நமதாக்கி தூய வாழ்வு வாழ்வதுதான் அன்னைக்கு நாம் சமர்ப்பிக்கும் பிறந்தநாள் பரிசு.

# விரைந்து செல்லும் மரியா

அருள்சகோதரி. டெக்லா ம.ஊ.ச.,
செர்வைட் தலைமையகம், சென்னை.

**தொடக்கவுரை**

செப்டம்பர் மாதம் பிறந்ததும் மரியின் ஊழியர் சபையைச் சார்ந்த அருட்பணியாளர்கள், அருட்சகோதரிகள், மரியின் ஊழியர் நண்பர்கள் மற்றும் புனித வியாகுல அன்னை பக்த சபையினர் ஆகியோருக்கு மிகுந்த மகிழ்ச்சி. அன்னையின் வியாகுலங்களுக்கு விழா எடுத்து மகிழும் மாதம் இது. புனித வியாகுல அன்னையின் ஆன்மீகத்தைத் தியானித்து நமது சிலுவைகளை எவ்வாறு ஏற்றுக் கொண்டு அவற்றை மீட்பின் சாதனங்களாக மாற்றலாம் என சிந்தித்து அவரோடு ஒன்றிக்கும் மாதம் இது. துன்பங்கள், சோதனைகள், இடர்பாடுகள் அற்ற ஒரு மகிழ்வான வாழ்வுச் சூழலில் நிலைத்துவிட இந்த உலகம் விரும்புகின்றது. ஆனால் அவைகள் இன்றி இவ்வுலக வாழ்வு அமையாது. இவைகளினூடே பயணித்து இவ்வுலகில் அமைதியும், மகிழ்ச்சியும் அனுபவித்து, மறு உலகிலும் மகிழ்ந்து இருக்கும் நிலைதான் கிறிஸ்தவ வாழ்வின் நோக்கமாக இருக்கின்றது. அன்னையின் வியாகுலங்களும் இதையே நமக்கு உணர்த்துகின்றன. தன் அன்பு மகன் இயேசுவோடு, நமது மீட்பிற்காக அவர் அனுபவித்த, விவரிக்க முடியாத வேதனைகள் நிறைந்த வியாகுலங்களின் பலனாக, இன்று அதே மகனின் மாட்சியில் பங்கு பெற்று விண்ணக மண்ணக அரசியாகத் திகழ்கிறார். எனவே நாமும் நமது துன்பங்களை மகிழ்வுடன், அமைந்த மனதுடன் ஏற்றுக்கொள்ள அன்னையிடமிருந்து கற்றுக் கொள்வோம்.

மரியாவைப் பற்றிய புரிதல்களை திருத்தந்தை பல வகைகளில் வெளிப்படுத்திக் கொண்டேயிருக்கின்றார். அண்மையில் உலக இளையோர் தினத்தில் அவரை 'விரைந்து செல்லும் மரியாவாகக்'' காட்டுகிறார். நற்செய்தியில் ஒரு சில பகுதிகளில் மரியா பிறருக்கு உதவி செய்ய எந்தத் தடையையும் விதிக்காமல் விரைந்து செல்வதை நாமும் காண்கிறோம். தனது உறவினர் எலிசபெத்துக்கு, அவரது முதிர்ந்த வயதில் பேறுகால உதவிகளைப் புரிய மனமுவந்து செல்லும் காட்சி லூக்கா நற்செய்தியில் விவரிக்கப்படுகிறது. நிறை கர்ப்பிணியாக இருந்த மரியா, மக்கள் தொகை கணக்கெடுப்பில் தனது கடமையை ஆற்ற பெத்லகேமுக்குச் செல்கிறார். வானதூதரின் அறிவுரையை ஏற்று, குழந்தை இயேசுவைக் காப்பாற்ற வளனாரோடு எகிப்துக்கு விரைகின்றார். சிறுவன் இயேசு பன்னிரெண்டாம் வயதில் காணாமற்போன போது எருசலேம் ஆலயத்தை நோக்கி நெடும்பயணம் மேற்கொள்கின்றார். கானாவூரில் திருமண வீட்டில் இரசம் பற்றாத சூழலில், மற்றவர் யாவருக்கும் அந்த நிலை தெரியுமுன் தன் மகனிடம் தெரிவிக்க ஓடுகின்றார். இயேசுவின் பொதுவாழ்வில் ஒருமுறை அவருக்கு பைத்தியம் பிடித்துவிட்டதாக பிறர் கூறக் கேட்டு அவரை வீட்டிற்கு அழைத்து





அத்தகைய ஆசிரியர்களில் ஒருவராய்
இன்றைய மாணவர் மனதில் நான் இருக்கின்றேனா?

செப்டம்பர் 5 ஆம் நாளாகிய ஆசரியர் தினத்தில்
நம்மையும் நம் ஆசரியர் பணியையும்
சுய ஆய்வு செய்வோம்.
நிறைகளை பெருக்குவோம், குறைகளை நீக்குவோம்!

ஆசிரியர்களாகிய நமக்கு
அறிவுப் பணியோடு சமூகப் பணியும் உண்டு
அறிவைத் தருவதன் நோக்கம் அவ்வறிவின் துணையோடு
இச்சமூகத்தைத் தூர்வாரி தூயதாக்குவதே
நம் பணியால் மாணவர் தம் வாழ்வில்
மாற்றங்களைக் காண வேண்டும்
நேற்று நம்மிடம் பயின்று போன மாணவர்தாம்
உலகம் வியக்கும் சாதனைகளையோ
உலகம் துடிக்கும் சோதனைகளையோ ஆற்றுகின்றனர்
நல்ல தலைவர்களை உருவாக்கவில்லை என்றாலும்
நாளைய தீவிரவாதிகள் வெளிவராமல்
நாட்டைக் காப்பது கடன்

ஆசிரியர்களாகிய நாம்
உண்மை, உழைப்பு, உயர்வு -இவற்றைப் போற்றி
கனிவு, பணிவு, துணிவு- இவற்றைப் பேணி
ஒழுக்கம், நாணயம், நேர்மை -இவற்றைப் பின்பற்றி
மாணவ சமுதாயத்தை மலர வைப்போம்
'நல்லாசிரியர்' விருது பெறாவிட்டாலும்
'நல்ல மனிதர்' என்னும் சமூக விருதைப் பெறுவோம்!

ஆசிரியர்களுக்கெல்லாம் ஆசிரியர்
இன்றைய ஆசிரியர்கள் பின்பற்ற வேண்டிய
மாதிரி ஆசிரியர், நல்லாசிரியர் இயேசு
நம்மீது நிறையாசீர் பொழியட்டும்!

# நல்லாசிரியர் இயேசு

திருமதி. ஃபிலோம்மா, திருச்சி.

மூன்று நாட்களுக்குப்பின் அவரைக் கோவிலில் கண்டார்கள். அங்கே அவர் போதகர் நடுவில் அமர்ந்து அவர்கள் சொல்வதைக் கேட்டுக் கொண்டும், அவர்களிடத்தில் கேள்விகளை எழுப்பிக் கொண்டும் இருந்தர். அவற்றைக் கேட்ட அனைவரும் அவருடைய புரிதல் திறனையும், அளித்த பதில்களையும் கண்டு மலைத்துப் போயினர்''- (லூக் 2:46-48)

'ரபி'- இதன்பொருள் சமயப் போதகர் என்பது
இயேசுவை 'ரபி' என அழைத்தனர்-ஏனெனில்
அவர் ஒரு சமயப் போதகர் -ஆசிரியர்
இயேசுவின் சீடர்கள் , பரிசேயர், மறைநூல் வந்லுநர்கள்
அனைவருக்கும் இயேசுவே ஆசிரியா
இயேசு செபக் கூட்டங்களில் கற்பித்தார்
அன்றைய சமூக அநீதி அமைப்பு மாறி
நீதியும், சமத்துவமும் , அன்பும் நிறை சமூக அமைப்பு அமைய
கற்பித்தவர் ஆசிரியர் இயேசு

''இறையாட்சி நெருங்கிவிட்டது,
மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்''
என்பதே இயேசுவின் கல்விக் கொள்கை

''நான் யார் என மக்கள் சொல்கிறார்கள்?.....
நீங்கள் என்னை யார் எனச் சொல்கிறீர்கள்? - (லூக் 9 :18-22)

இன்றைய ஆசிரியர்கள் மாணவர்களிடம்
இதே வினாவை விடுக்கலாமே!
நம் ஒவ்வொருவருடைய கல்விப்பருவத்திலும்
நமக்குக் கற்பித்த ஆசரியர் ஒருவரின்
பண்பு நலன்கள், கற்பித்தல் திறன், ஆளுமை - இவை
நம் மனத்தில் ஆழமாய்ப் பதிந்திருக்கும்
மறக்க இயலாத அந்த ஆசிரியர்
நம் வாழ்வின் சாரமாய் இருந்து கொண்டிருப்பார்.





வரச் செல்கின்றார். மீட்பரின் சிலுவைப் பாதையில் அவரைத் தொடர்ந்தார். தூய ஆவியாரின் வருகைக்காக எருசலேமில் தங்கி இறைவேண்டலில் இணையுங்கள் என்று இயேசுவின் ஆணைக்கு விரைந்து, பணிந்து, சீடர்களையெல்லாம் ஒன்று திரட்டி அவர்கள் மத்தியில், பிறக்கவிருக்கும் திருஅவையின் தாயாக அமர்ந்தார். மரியாவின் இந்த விரைந்து செல்லும் பாங்கினை சற்று ஆழ்ந்து சிந்தனை செய்வோம். இந்த விரைவு நிகழ்வுகள் வழியாக நம் அன்னை நமக்கு உணர்த்துவதை நம் வாழ்வில் செயல்படுத்துவோம். இதைப்பற்றிய சில பகிர்வுகளை இக்கட்டுரை கொணர்கிறது.

**யூதேய மலைநாட்டிற்கு விரைவு**

இயேசு பிறப்பின் முன்னறிவிப்பு நிகழ்வின் இறுதியில் 'மரியா, நான் ஆண்டவரின் அடிமை உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்'' என்று கூறியதும் வானதூதர் அவரை விட்டு அகன்றார். அதன்பின் மரியா புறப்பட்டு யூதேய மலைநாட்டிலுள்ள ஒரு ஊருக்கு விரைந்து சென்றார் (லூக் 1:38-39). ஏன் விரைந்து சென்றார்? என்பதை நாம் யூகிக்கலாம். வயது முதிர்ந்த தம் உறவினர் எலிசபெத்து கருவுற்று ஆறு மாதம் ஆகியதால் அவருக்கு உதவி செய்யச் சென்றிருக்கலாம். தனது மகிழ்வான செய்தியாகிய மீட்பரின் தாயாகும் பெரும் பேற்றினை பகிர்ந்து கொள்ளச் சென்றிருக்கலாம். அது தொடர்பான ஆலோசனையைப் பெற விரைந்திருக்கலாம். ஆனால் மரியா தூய ஆவியாரால் வழிநடத்தப்பட்டுச் சென்றது உண்மையாகிறது. மரியா - எலிசபெத்து சந்திப்பு நிகழ்வில் இறைவனின் தாயும், முன்னோடியின் தாயும் சந்திக்கின்றனர். இங்கு இரண்டு அன்னையர் மட்டும் சந்திக்கவில்லை, வாழ்த்தவில்லை. மரியாவின் கருவில் உதயமான இயேசுவும், எலிசபெத்தின் உதரத்தில் உயிர்த்த திருமுழுக்கு யோவானும் சந்திக்கின்றனர். மீட்பரும், மீட்பரை உலகிற்கு அறிவிக்கவிருப்பவரின் குரலும் சந்தித்து மகிழ்கின்றன. தம் அன்னையரின் உதரத்திற்குள்ளே இருவரும் மீட்பின் அக்களிப்பினால் களிநடனம் புரிகின்றனர். நாம் அனைவரும் மீட்பினை பெற இருக்கின்றோம் என்பதையும், இறைவாக்கினர்கள் முன்னறிவித்த காலம் நிறைவுறுவதையும் கண்டு அக்களிக்கின்றனர். பெண்களுள் ஆசி பெற்றவராக, அவர்தம் மகன் இயேசுவும் ஆசி பெற்றவராக எலிசபெத்து உளம் பூரிக்கின்றார். மரியாவை ஆண்டவரின் தாயாகக் கண்டு மனம் நெகிழ்கின்றார். நிறைவாக மரியாவின் புகழ்பாடல், இந்த சந்திப்பின் கொடுமுடியாக முழங்கப்படுகிறது. மீட்பராம் இயேசு அடிமைத்தனங்களை முறியடித்து விடுதலையின் வீரராக வெற்றி பெறுவார். அவரை நம்பினோர் இறையாட்சியின் உரிமையைப் பெற்றுக் கொள்வர் எனும் புரட்சிக்கீதம் இரண்டாயிரம் ஆண்டுகளாக நம் இதயங்களில் ஒலித்துக் கொண்டே இருக்கின்றது.

**கானாவில் திருமண வீட்டில்**

'திருமண வீட்டில் திராட்சை இரசம் தீர்ந்து போகவே இயேசுவின் தாய் அவரை நோக்கி 'திராட்சை இரசம் தீர்ந்துவிட்டது'' என்றார்'' (யோவான் 2:3) திருமண வீட்டிற்கு அழைப்பு பெற்ற விருந்தினராக இயேசுவும் சீடர்களும் வருகை புரிந்தனர். ஆனால் மரியா அதற்கு முன்பாகவே அவ்வீட்டில் இருப்பதை நற்செய்தியின் வழி அறிகிறோம். இயேசுவின் பிரசன்னம் கூட்டத்தை அதிகரிக்கின்றது. எனவே மரியா இரசப்பற்றாக்குறையை முன்னுணர்ந்தவராய் திருமண வீட்டில்

இருந்திருக்க வேண்டும். இவ்வாறு உன்னிப்பான கண்காணிப்பினால் திருமண வீட்டாருக்கும் மணமக்களுக்கும் வரவிருந்த கவலையை, சங்கடத்தைப் போக்கி அங்கு மகிழ்வை ஏற்படுத்த மரியா, மகனிடம் விரைகின்றார். 'திராட்சை இரசம் தீர்ந்து விட்டது'' என்ற பரிந்துரையை முன்வைக்கின்றார். இயேசுவிடத்தில் தயக்கம் இருந்தாலும் துணிவுடன், நம்பிக்கையுடன் 'அவர் உங்களுக்கு சொல்வதெல்லாம் செய்யுங்கள்'' என்று பணியாளர்களிடம் பணிக்கின்றார். இக்கட்டான சூழலில் இயேசு மட்டுமே மகிழ்வுச் செய்தியாக முன் வருவார் என்று உணர்கின்றார். 'எனது நேரம் இன்னும் வரவில்லையே'' என்று இயேசு பின்வாங்கினாலும், அரும் அடையாளம் செய்யும் நேரம் கனிந்து விட்டது என்பதை மரியா மகனுக்கு உணர்த்துகின்றார். ஆபத்தில் உதவும் நேரம்தானே மனித வாழ்வை மலரச் செய்கின்றது. அன்னையின் முயற்சிக்கு நிறைந்த பலன் கிடைக்கின்றது. அனைவரும் அதிகமாகவே இரசம் பருகி, மகிழ்ந்து, இல்லம் திரும்பினர். மரியாவும் தனது உள்ளத்தில் இறைவனுக்கு நன்றிப் பாடல் இசைத்திருப்பார். ஏனெனில் புதிய இரசமாம் இயேசுவை உலகிற்கு அறிமுகப்படுத்திய பெருமை அவர் முகத்தில் பிரகாசித்தது.

**அன்னை தரும் பாடங்கள்**

இவ்வாண்டு ஆகஸ்ட் 1 முதல் 6 வரை, திருத்தந்தை உலக இளையோரின் தினத்தை போர்ச்சுக்கல் நாட்டின் தலைநகரான லிஸ்பனில் கூட்டினார். ஏறக்குறைய ஐந்து இலட்சம் இளையோர் அக்கூட்டத்தில் கலந்து கொள்வதாக இணையதளத்தில் பதிவு செய்திருந்தார்கள். திருத்தந்தை பிரான்சிஸ் 2 முதல் 6 வரையிலான நாட்களில் பல நிகழ்வுகளில் பங்கேற்று அன்னை மரியாவைப் பற்றிய புதிய கருத்துக்களை எடுத்துக் கூறினார். 'மரியா புறப்பட்டு விரைந்து சென்றார்''. (லூக் 1:39) என்பதுதான் இந்த ஆண்டின் மையப் பொருளாக இருந்தது. இதை விளக்கும்போது திருத்தந்தை பின்வருமாறு கூறுகிறார்: 'விரைந்து எழுந்திருங்கள், விரைந்து புதிய உரையாடல்களை மேற்கொள்ளுங்கள் நற்செய்தியைப் பரப்ப விரையுங்கள் கிறிஸ்தவர்களின் சகாய அன்னையின் பாதுகாப்பு என்றும் உங்களோடு இருக்கும். அன்னை மரியா, தீமைகளிலிருந்து தன் குழந்தைகளைக் காப்பாற்றுவதற்கு கையில் குச்சியோடு இருக்கின்றார். அவரைப் பின்பற்றுங்கள். அவர் உயிர்ப்பின் பெண்ணாக, தொடரும் விடுதலைப் பயணத்தில் தன்னை உட்படுத்திச் செல்கின்றார். கண்ணாடி முன் நின்று தங்களை உற்று நோக்குபவர்களைப் போலலர் அவர். இணையதளங்களில் மூழ்கிக்கிடப்பவர் போல் அல்லர் அவர். எப்போதும் தேவையில் இருப்போருக்கு உதவி செய்ய முன்னறிவிப்பு இல்லாமலேயே விரைபவர். இதற்கு ஊற்றாக அவரிடம் பிறப்பெடுத்தது இறையன்பு. இறைவனிடம் மிக நெருக்கமான உறவில் வாழ்ந்து வந்தார். அதே அன்பும், பாசமும் தேவையில் இருப்போரிடம் இருந்தது. எனவே நலமற்ற, ஆரோக்கியமற்ற செயல்களை மேற்கொள்ள விரைந்து செல்லும் மனநிலையை இளையோர் தவிர்க்க வேண்டும். எளிதாகவும், அக்கறையற்ற அசட்டுத்தனத்திலும் எதையும் அணுகும் மனநிலையைக் களைய Nt z Lk;'' என்று திருத்தந்தை அன்புடன் அறிவுரை வழங்கினார். மேலும் யூதேய நாட்டிற்கு விரைந்த செயலை, அவர் விண்ணகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிகழ்வோடு ஒப்பிட்டுக் கூறியது வியப்பாக இருக்கிறது.

தொடர்ச்சி 27-ம் பக்கம்................





மரியாவால் அடையாளம் காட்டப்பட்ட அந்த இடத்தில் செல்வந்தர் ஜானின் உதவியோடு திருத்தந்தை லிபேரியஸ் அவர்கள்.தூய மரியன்னை பேராலயத்தைக் கட்டி எழுப்பினார். பிற்காலத்தில் திருத்தந்தை மூன்றாம் சிக்ஸ்டஸ் அவ்வாலயத்தை புதுப்பித்தார்.

**வால்ஷின்காம் அன்னை காட்சி**

இங்கிலாந்து நாட்டின் வால்ஷின்காம் நகரில் வாழ்ந்த ரிசல்ட்டின் தே பவர் செஸ் என்ற பெண்மணிக்கு கிபி 1061 - ஆம் ஆண்டு செப்டம்பர் 24 - ஆம் தேதி அன்னை மரியா காட்சி அளித்தார். அப்போது அன்னை அவரிடம் ''நாசரேத் இல்லம் போன்று இங்கு எனக்கு ஒரு இல்லம் எழுப்பப்பட வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார். அன்னை மரியாளின் வேண்டுகோளை ஏற்று அப்பெண்மணி அன்னைக்கு அந்த இடத்தில் நாசரேத் இல்லத்தைப் போன்றே ஒரு ஆலயத்தைக் கட்டி எழுப்பினார்

**குவாதலூப்பே அன்னை காட்சி**

குவாத லூப்பே அன்னை என்பது இயேசுவின் அன்னையாம் தூய கன்னி மரியாவுக்கு கத்தோலிக்க திருச்சபையில் வழங்கப்படும் பெயர்களில் ஒன்றாகும். மெக்சிகோ நாட்டின் குவாதலூப்பே நகரில் வாழ்ந்த புனித யுவான் தியெகோ மற்றும் யுவான் பெர்னார்டினோ ஆகியோருக்கு கிபி 1531 - ஆம் ஆண்டு டிசம்பர் 9-ஆம் தேதி முதல் அன்னை மரியா காட்சியளித்தார் அப்போது மரியன்னை ''வாழ்வளிக்கும் உண்மை கடவுள் கடவுளின் கன்னித்தாய் நான் என்னை தேடி வரும் அனைவருக்கும் அன்னைக்குரிய அன்பையும் தாய்க்குரிய கனிவையும் தருவேன் எனக்கு இங்கு ஒரு ஆலயம் எழுப்பப்பட வேண்டும்'' என்று மொழிந்தார். பின்பு அன்னை காட்சியளித்த இடத்தில் ஒரு அழகிய ஆலயம் கட்டி எழுப்பப்பட்டு இன்றளவும் புகழ்பெற்று விளங்குகிறது. 1999 - ஆம் ஆண்டு திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் குவாதலூப்பே அன்னை எனும் பட்டத்தின் கீழ் தூய கன்னி மரியாளை அமெரிக்காவின் பாதுகாவலி, லத்தின் அமெரிக்காவின் அரசி, மற்றும் கருவில் இருக்கும் குழந்தைகளின் பாதுகாவலர் என அழைத்துள்ளார்

இப்படியாக பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு நிலைகளில் மக்களுக்கு காட்சி தந்த மரியா, தான் வாழும் காலத்தில் இயேசுவோடு ஒன்றிணைந்து உலக மக்களின் மீட்புக்காக பாடுபட்டிருக்கிறார், இவர் காட்சி அளித்த பெரும்பாலான நேரங்களில் ஆலயம் கட்டுவதற்காகவே பணித்திருக்கிறார். அந்த ஆலயங்களின் மூலம் மக்களின் நெறிப்படுத்தி மக்களின் பாவங்களை மீட்டு மக்களை நல்வழிப்படுத்துவதற்காகவே தனது காட்சிகளை பயன்படுத்திக் கொண்டிருக்கிறார் என்பது தெள்ளத் தெளிவாக தெரிகிறது. ஆகவே, அன்பு மக்களே விண்ணுக்கும் மண்ணுக்கும் அரசியாக முடிசூட்டப்பட்ட நமது அன்னையை வணக்கம் செலுத்துவதில் நாம் பெருமைகொள்வது மட்டுமல்லாமல் அன்னையைப் போலவே இயேசுவின் வழியை பின்பற்றி அவரின் பாதச்சுவடுகளில் தடம் பதிப்போம், மனம் மாறுவோம்..



## பொதுநிலையினரின் பார்வையில் மரியா ⑦

திரு. பரிசுத்தமணி சோழிங்கநல்லூர், சென்னை

### அன்னை மரியாளின் அற்புதக் காட்சிகள்

உருவில்லாத இறைவன் மரியாவின் கருப்பையில் மனித உடல் எடுத்ததால் இவர் இறைவனின் தாய் என்று அழைக்கப்படுகிறார். தாவீது குலத்தை சேர்ந்த புனித யோசேப்பு இவரது கணவராவார். மரியாள் கிறிஸ்தவர்களால் சிறப்பாக கத்தோலிக்க மற்றும் கிழக்கு மரபு வழி திருச்சபையினரால் மிகவும் மதிக்கப்படுகிறார்.மரியா உலக வரலாற்றிலே பல தருணங்களில் வெவ்வேறு இடங்களில் மக்களுக்கு காட்சி அளித்துள்ளார். அவற்றில் சில முக்கியமான காட்சிகளை இங்கு பார்ப்போம்.

### எருசலேம் காட்சி

அன்னை மரியாளின் மண்ணக வாழ்வின் இறுதிக்கட்டத்தில் இருந்தபோது உயிர்த்த இயேசுவின் நற்செய்தி அறிவிக்க உலகெங்கும் பல இடங்களுக்கு சென்றிருந்த திருத்தூதர்கள் இறை உந்துதலால் எருசலேம் நோக்கி விரைந்தனர். ஆனால், தோமா வெகு தூரம் சென்றிருந்த காரணத்தால் அவரால் அன்னையை தரிசிக்க முடியவில்லை. மற்ற திருத்தூதர்கள் அனைவருக்கும் ஆசி வழங்கிய நிலையில் அன்னை மரியா உடலோடும் ஆன்மாவோடும் விண்ணகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார் என்று திருஅவை வரலாறு சொல்கிறது. மரியா விண்ணகம் சென்றபின் அவரது ஆசியை பெற தோமா அன்னையைக் காண வேண்டும் என்ற ஆவலோடு விண்ணகத்தை நோக்கி ஜெபம் செய்து கொண்டிருந்தார். கிபி 46 வது வருடத்தில் ஆகஸ்ட் 22 - ஆம் தேதி விண்ணேற்பு அடைந்த மரியா தோமாவுக்கு தோன்றி தான் விண்ணக ஆட்சியில் இருப்பதை உறுதி செய்ததுடன் தனது இடைக்கச்சையையும் அவரிடம் வழங்கினார்.

### ரோம் காட்சி

இத்தாலி நாட்டின் ரோம் நகரில் வாழ்ந்த செல்வந்தரான ஜான் என்பவருக்கும் திருத்தந்தை லிபேரியஸ் அவர்களுக்கும் அன்னை மரியா கி.பி 352 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 4 - ஆம் தேதி அன்று காட்சி அளித்தார். மறுநாள் எஸ்குலின் குன்றின் மேல் பனி சூழ்ந்திருக்கும் இடத்தில் தனக்காக ஒரு ஆலயம் எழுப்பப்பட வேண்டும் என்று மரியன்னை அவர்களுக்கு உரைத்தார். ஆகஸ்ட் 5 - ஆம் தேதி எஸ்குலின் குன்றுக்கு அவர்கள் சென்று பார்த்தபோது அங்கே ஒரு குறிப்பிட்ட இடத்தில் மட்டும் பனிமயமாக காட்சியளித்தது. அன்னை





## அன்னையின் ⑤⑦ திருத்தலங்களை நோக்கி...

அருள்பணி. சகாயராஜ் ம.ஊ.ச., இத்தாலி.



### புனித திருச்சிலுவை ஆலயம், மணப்பாடு (பழைய விண்ணக அரசி ஆலயம் பங்கை சார்ந்தது)

செப்டம்பர் மாதம் என்றவுடன் கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் நினைவிற்கு வருவது, கன்னிமரியாளின் பிறப்பு விழா, திருச்சிலுவை விழா மற்றும் வியாகுல அன்னையின் விழாவாகும். வியாகுல அன்னையின் விழா பற்றியும், வியாகுல அன்னையின் திருத்தலங்களைப் பற்றியும் இத்தொடரின் பல கட்டுரைகளில் நாம் விரிவாக கண்டுள்ளோம். எனவே, இக்கட்டுரையில் தமிழகத்தில் புனித திருச்சிலுவைக்கு அர்ப்பணிக்கப்பட்ட பழமையான ஆலயம் குறித்து காண்போம்.

ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 14ஆம் தேதி புனித திருச்சிலுவை விழாவானது திருஅவையால் கொண்டாடப்படுகிறது. இவ்விழாவானது, புனித திருச்சிலுவையானது பெர்சியர்களிடமிருந்து பேரரசர் ஹெராக்கிலியுஸ் அவர்களால் மீட்டெடுக்கப்பட்டதை நினைவுகூர்ந்து கொண்டாடப்படுகிறது. இத்திருச்சிலுவையின் பகுதிகளானது, உலகின் பல்வேறு பகுதிகளில் உள்ள முக்கியமான ஆலயங்களுக்கு புனித பண்டமாக வழங்கப்பட்டு வணக்கம் செலுத்தப்படுகிறது. அத்தகைய சிறப்பு மிக்க ஆலயம்தான், தூத்துகுடி மறைமாவட்டத்தில் உள்ள மணப்பாடு புனித திருச்சிலுவை ஆலயமாகும்.

மனிதர் வாழ்வில் துன்பம் ஏற்படுகிறபொழுதெல்லாம் இறைவனின் அற்புதமான கரம் செயலாற்றுகிறது என்றும், அங்ஙனம், இறைவனின் மகிமை விளங்குகிறபோது மனிதர்கள் தங்கள் நன்றிகளை எவ்வாறெல்லாம் வெளிப்படுத்துகிறார்கள் என்பதற்கு கடற்கரை கிராமமான மணப்பாட்டில் திருச்சிலுவை ஆலயம் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

கி.பி. 1540ஆம் ஆண்டுவாக்கில் நன்னம்பிக்கை முனையை தாண்டி கிழக்கு நோக்கி போர்த்துகீசிய கப்பல் ஒன்று பயணித்துக் கொண்டிருந்தது. கடலில் ஏற்பட்ட கடுமையான புயலிலும், பெருமழையிலும் சிக்கத் தவித்த கப்பல் ஒன்று கரைதட்டி நின்றது. செய்வதறியாது தவித்த கப்பலின் தலைவன் ஒரு சீரிய பக்திமான். துன்பநேரத்தில் தந்தையை நோக்கி செபித்த ஆண்டவரைப் போல, அவரும் இறைவனை நோக்கி மன்றாடினார். தனது கப்பலும், கப்பலில் பயணிக்கும் குழுவினரும் பத்திரமாக கரைச்சேர்ந்தால், கரைசேருமிடத்தில் உடைந்து போன கப்பலின் கொடிமரத்திலிருந்து ஒரு திருச்சிலுவை செய்து நாட்டுவதாக வேண்டினார். காற்றின் வேகம் தணிந்தது, மழை நின்றது கரை தட்டிய கப்பலும், பத்திரமாக கரை சேர்ந்தது. அக்கப்பல்

வந்து சேர்ந்த இடம் குலசேகரப்பட்டினம் என்றழைக்கப்படும் மணப்பாடு ஆகும். தன்னுடைய பொருத்தனையை நிறைவுசெய்யும் விதமாக, அங்கிருந்த இயற்கை துறைமுகத்தின் தென்பகுதியிலிருந்த ஒரு குன்றின் மீது, கப்பலின் கொடிமரத்திலிருந்து சிலுவை ஒன்றை செய்து நிறுவினார். அதற்கு, பாதுகாப்பாக ஒரு குடில் ஒன்றையும் அமைத்தார்.



புனித சிலுவை நிறுவப்படுவதற்கு முன்பு கப்பலின் முறிந்த கொடிமரமானது கடற்கரையில் வைக்கப்பட்டிருந்தது. அப்போது. அவ்வழியே சென்ற ஒருவர் தன் காலில் இருந்த அழுக்கை நீக்க அம்மரத்துண்டின் மீது பாதத்தை தேய்த்து அழுக்கை அகற்றியதும் அவரது கால் வீங்கி கடும் வலியினால் துயருற்றார். மிகுந்த சிரமப்பட்டு வீடு திரும்பினார். இரவில் அவர் கண்ட கனவில் அவரது கால் வீக்கத்திற்கும், வலிக்கும் காரணம், அவர் புனித சிலுவை செய்வதற்காக வைக்கப்பட்ட கொடிமரத்தை அவர் செய்த அவநிந்தனையே என்று அறிந்து கொண்டார். விடிந்ததும் தன் கனவை வீட்டாரிடம் தெரிவிக்க, அவர்கள் அவரை ஒரு கட்டிலில் கிடத்தி கடற்கரைக்கு தூக்கிச் சென்றனர். செய்தியறிந்த ஊர் மக்களும் அங்கு ஒன்று கூடினர். அவருக்கு கனவில் கூறப்பட்டது போன்றே அவர் அக்கொடிமரத்துண்டை நன்கு துடைத்து, எண்ணெயால் அபிசேகம் செய்து, அம்மரத்திலிருந்த எண்ணையை எடுத்து காலில் பூசியவுடன் அவர் குணமடைந்தார். கூடியிருந்த ஊர் மக்கள் அனைவரும் வியப்புற்று அக்கொடிமரத்தை போர்த்துகீசியருடன் இணைந்து தூக்கி சென்று, கப்பல் தலைவன் விரும்பிய படி குன்றின் மேல் சிலுவையாக வடித்து நிறுவினர் என்கிற செய்தியும் வழிமரபுச் செய்தியாக கூறப்படுகிறது.

கி.பி. 1532ல் கிறிஸ்தவத்தை தழுவிய மக்கள் மணப்பாடு கிராமத்தில் பெரும்பான்மையாக வசித்தனர். ஆனால், அவர்களை ஆன்மீக வழியில் தொடர்ந்து வழிநடத்த எவரும் இல்லாத காரணத்தினால், திருமுழுக்கு பெற்று பின் எந்தவித ஆன்மீக வளர்ச்சியும் இன்றி இருந்தனர். பத்தாண்டுகள் கழித்து அதாவது, கி.பி 1542ல் அவர்களது வாழ்வில் புதுவசந்தம் ஒன்று ஏற்பட்டது. புனித பிரான்சிஸ் சவேரியார் தன்னுடைய முத்துக்குளித் துறைமுக வேதபோதக பணியின் முக்கிய பணித்தளமாக மணப்பாடு கிராமத்தைத் தேர்ந்து கொண்டார். அதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று சிலுவை நிறுவப்பட்டிருந்த குன்றில் ஒரு சிறிய







பெருமையும் இயேசுவை விசுவசித்தவள் எனும் வகையில் அவர் பெற்றவையே. எனவே விசுவசிப்போர் அனைவருக்கும் என்னென்ன சிறப்புக்களை இறைவன் தர இருக்கின்றார் என்பதற்கு மரியா ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. இவ்வாறு மரியாளது கருவிலேயே அவருடைய நிலையும் கன்னிமை தன் அர்ப்பணமும், வியத்தகு விண்ணேற்றம் உண்மை விசுவாச வாழ்வின் உயர்ந்த அர்த்தங்களையும், உள்ளார்ந்த கடமைகளையும் உரிய சிறப்புகளையும் உறுதியாக எடுத்தரைக்கும் முன்னிறைகளும் முன் வெளிப்பாடுகளுமே ஆகும். எனவேதான் மரியை திருஅவையின் சிறந்த முன் மாதிரி, எடுத்துக்காட்டு என திருஅவை தெளிவுபடுத்துகிறது.

8-ம் பக்க தொடர்ச்சி................

**இறுதியுரை**

அன்னை மரியா என்றுமே நமக்கு சிறந்த முன்மாதிரியாக இருக்கின்றார். இறைவன் மீது அவர் கொண்டிருந்த அன்பு, பற்று, மற்றவர்களின் மீதும் குறிப்பாக ஏழைகள், தேவையில் இருப்போர் மீதும் இருந்தது. இறைவார்த்தையில் ஊன்றியவராய் அந்த உயிருள்ள வார்த்தை அழைக்கும் சீடத்துவ வாழ்வில் பயணித்தார். இயேசுவின் அன்னையாக, அதே இயேசுவுக்கு சீடத்தியாக தன்னை அர்ப்பணித்தார். சீடத்துவ வாழ்வின் விழுமியங்களான ஆர்வம், பணிவு, துணிவு, பகிர்வு, இரக்கச் செயல்களில் ஈடுபாடு அனைத்தையும் தனது உரிமையாக்கினார். அவரது ஆளுமை, இவற்றில் ஒளிர்ந்து மிளிர்ந்தது. சீடர்களை ஒன்றிணைத்தார். அவர்கள் இயேசுவின் கட்டளைகளை நிறைவேற்றப் பணித்தார். அவர்களுக்கு உந்து சக்தியாக இருந்தார். இயேசுவின் இடத்தை மரியா பூர்த்தி செய்தார். ஒரு சாதாரண நாசரேத்து சிற்றூரைச் சார்ந்த ஒரு பெண், இறைவனின் துணையால் பெரும் காரியங்களை ஆற்றுவது நமக்கு நம்பிக்கையைத் தருகிறது. கிறிஸ்தவர்களாகிய நாமும் நமது திருமுழுக்கில் இத்தகைய சீடத்துவ அழைப்பைப் பெற்றோம். தூய ஆவியாரின் அருளில் நனைந்தோம். ஆனால் காலப்போக்கில், உலகத்தின் பிடியில் சிக்கித் தவிக்கிறோம். இயேசுவின் விழுமியங்கள் விளிம்பு நிலைக்குத் தள்ளப்படுகின்றன. பணம், பதவி படிப்பு, சொகுசு, என் குடும்பம் மட்டும் நன்றாக இருக்க வேண்டும் என்று மறுமை உலகைப் பற்றிய கவலையே இல்லாமல், வேகமாக எங்கோ ஒரு திசையை நோக்கிச் செல்கிறோம். திருத்தந்தை வழியாக, மரியா நம்மை அழைக்கின்றார். இந்த உலகில் எதிர்நீச்சல் போடுவதற்கு தயாராகுவோம். அன்னையைப் போன்று நன்மைகள் செய்ய விரைவோம். இரக்கச் செயல்களில் மூழ்குவோம். எளியவர் துயர் துடைக்க நமது கைகளை நீட்டுவோம். உள்ளத்தின் ஆழத்தில் விவரிக்க முடியாத மகிழ்வை அமைதியை சுகிப்போம்.

துன்ப சாகரத்தில் மூழ்கிக் கொண்டிருக்கும் மக்களை தூக்கிவிட புனித வியாகுல அன்னை, தனது அரவணைக்கும் கரங்களை நீட்டுகின்றார். நமக்குத் தேவை நம்பிக்கை ஒன்றே. இம்மைக் காலத்தில் நாம் படும் துன்பங்கள் நம்மிடம் வெளிப்பட போகும் மாட்சியோடு ஒப்பிடும்போது அவை ஒன்றுமே இல்லை என்ற நம்பிக்கை நம்மில் பிறக்க வேண்டும். இரண்டாவதாக, நம்மை ஆற்றுப்படுத்தி தேற்றி வரும் கரங்களை நாம் கண்டுணர்ந்து கொள்ள வேண்டும். அச்சூழ்நிலையிலிருந்து விடுதலை பெற்று மகிழ்வுடன் நமது அன்றாட பணிகளை மேற்கொள்ள வியாகுல அன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்ட இம்மாதத்தில் உறுதி எடுப்போம். அதற்கு நன்றியாக அவரது வியாகுல பக்தியை பரப்புவோம். இவ்வாறு வியாகுல ஆன்மீகத்தில் வளர்ந்து, நமது அன்னை நம்மீது பொழியும் ஆசீரை நிறைவாகப் பெறுவோம்.

அதனால் இயேசுவின் சீடர்குழாமாகிய திரு அவையின் மாதிரியாகவும் எடுத்துக் காட்டுகிறது. மரியா திரு அவையின் மாதிரி என சங்கம் முக்கியத்துவம் தந்து முன்வைக்கும் இக்கருத்து அப்படி ஒன்றும் புதியதோ புரட்சியானதோ இல்லை. யோவான் நற்செய்தியில் மரியாள் தோன்றும்போதெல்லாம் ஒரு வெறும் தனி ஆளாக அன்று மாறாக ஆழ்ந்த அர்த்தங்களை உள்ளடக்கிய ஒரு அடையாளமாக திரு அவையின் ஓர் உருவகமாக அறிமுகம் ஆகின்றாள். அதுபோலவே திருத்தந்தையர்களின் எழுத்துக்களிலும் போதனைகளிலும் மரியா திரு அவையின் மாதிரி எனும் கருத்து ஆங்காங்கே காணக் கிடக்கும் ஒன்றுதான்.

மரியா திருஅவையின் ஒரு உறுப்பினர். ஏனெனில் அவள் விசுவசித்தாள். “உமது வார்த்தையின்படியே எனக்கு நிகழட்டும்” (லூக் 1:36) என தன்னை ஆண்டவரது அடிமையாக்கியவள். “ஆண்டவர் சொன்ன வாக்கு நிறைவேறும் என்று விசுவசித்தவள் பேறுபெற்றவளே”(லூக் 1:45) என எலிசபெத்தால் வாழ்த்தப் பெற்றவள். “ஒரே மனத்தவராய் செபத்தில் ஈடுபட்டிருந்தார்கள்”.(தி.பணி 1:14) என திருத்தூதர் பணி தெளிவாக குறிப்பிடுவது போல தூய ஆவியின் வருகைக்காகக் காத்திருந்த தொடக்க திருச்சபையின் ஒரு உறுப்பினர் எனும் கருத்தை வலியுறுத்த விரும்பியதால்தான் சங்கம் அவரை திருஅவையின் தாய் என்று அழைக்கவில்லை. இருப்பினும் சங்கத்தின் மூன்றாம் அமர்வில் திருஅவை எனும் ஏட்டை வெளியிட்டபோது திருத்தந்தை ஆறாம் பவுல் “திருஅவையின் தாய்” என்னும் சிறப்புப் பெயரை மரியாவுக்கு சூட்டினார். ஆனால் மரியாவை திருஅவையின் தாய் என்று அறிக்கையிட்டதால் அவர் திருஅவைக்கு வெளியே விலகி வேறுபட்டு உயர்ந்து நிற்பவள் என்று திருத்தந்தை பொருள்கொள்ளவில்லை. மாறாக, அதே உரையிலேயே அவர் குறிப்பிடுவதுபோல மரியா “திருஅவையின் மிகப்பெரிய மிகச்சிறந்த மிக முக்கிய மிகவும் தேர்ந்தெடுக்கப்பட்ட பாகம்” என அழுத்திக் கூறுகிறார்.

ஆம், மரியா இயேசுவைப் பெற்றெடுத்த தாய் என்பதால் அவரது திருஅவைக்கும் தாய் என்பதில் தவறில்லை. ஆனால் இயேசுவை விசுவசித்தவள் அவரது சிறந்த சீடத்தி என்னும் வகையில் அவர் திருஅவையின் தலைமகள் என்பது உண்மை. மரியா திருஅவையின் தலைமகள் என்றால் அவரை நாம் பார்க்கும்போது திருஅவையை அதன் மிக உயர்ந்த, மிகச்சிறந்த வடிவில் நாம் காண்கின்றோம். திரு அவையின் அழைப்பும் அர்த்தமும் பண்புகளும் பணிகளும் அதன்மூலம் மகளாகிய மரியாவிடம் மிகத் துலக்கமுடனும் தனியொரு முழுமையுடனும் காணக் கிடப்பது இயல்பு. ஆம், மரியா திருஅவையின் உண்மை இயல்பின் ஒரு ஒப்பற்ற உருவகம். அதன் இன்றைய வாழ்விற்கும் பணிக்கும் அவர் இணையற்ற ஒரு மாதிரி. அதன் எதிர்கால நிறைவின் முழுமையான ஒரு முன்னாக்கம்.

இதனால் மரியாவின் சிறப்புக்கள் அவருக்கு மட்டுமே உரிய தனி உரிமைகள் அல்ல. அவருக்கு உரிய அத்தனை சிறப்பும்







குகையிருந்தது. இயற்கையாக அமைந்த அந்த குகை, அமைதியும், தனிமையும் நிறைந்த காரணத்தினால் புனிதர் அவ்விடத்தை தன் இல்லிடமாகக் கொண்டார்.

இக்குகையின் நுழைவாயிலில், “புனித சவேரியாரின் செபத்தாலும், தவத்தாலும் இக்குகையானது அர்ச்சிக்கப்பட்டது” என்ற கல்வெட்டு காணப்படுகிறது. ஆர்ப்பரிக்கும் கடலும், பூத்துக்குலுங்கும் விண்மீன்கள் மட்டும் துணைநிற்கும் இந்த குகையை தன் இல்லிடமாக தேர்ந்தெடுத்ததே புனிதரின் எளிய வாழ்க்கையையும், இறைவனை மட்டுமே துணையாக கருதினார் என்பதையும் நமக்கு எடுத்தியம்புகிறது. அமைதி தவமும் அக்குகை இயற்கையான ஆலயமாக அமைந்து ஆண்டவரின் உன்னத பலியாம் திருப்பலியை பக்தியான முறையில் கொண்டாட முடியும் என்பது மற்றொரு காரணமாக அமைந்தது. அங்கிருந்தபடியே, முத்துக்குளித்துறை முழுவதும் கால்நடையாகவே சென்று ஆண்டவரின் நற்செய்தியை அறிவித்து கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்களுக்கு திருமுழுக்கு அளித்தார். கி.பி. 1543ல் கோவா திரும்பினார். பின், 1534ஆம் ஆண்டு மார்ச், ஜீன், ஆகஸ்டு மற்றும் செப்டம்பர் மாதங்களில் மணப்பாடு வந்து இறைப்பணியாற்றி திருவிதாங்கூர் சென்றார்.

கடற்கரையின் மிக அருகில் இருந்தாலும், இக்குகையில் ஒரு நன்னீர் கிணறு ஒன்று உள்ளது. இது புனிதரின் வரத்தால் என்று நம்பப்படுகிறது.

மணப்பாடு மக்களுக்கு புனித பிரான்சிஸ் சவேரியார் கிறிஸ்துவை அறிவித்த வேதபோதகர் என்பதை காட்டிலும், எல்லோரின் சிறந்த நண்பராக விளங்கினார். அவருடைய எளிமையான வாழ்க்கை, பக்தி நிறைந்த அனுதின செபங்களால் பிரச்சினைகளோடு அண்டி வரும் அனைவருக்கும் ஆறுதலும், வழிகாட்டுதலும் அளித்த பாங்கு, மக்களை பெருந்திரளாக அவரிடம் கூட்டிச் சேர்த்தது. மணப்பாட்டில் அவர் இருந்த காலங்களில், தமிழ் மொழியில் பாண்டித்தியம் பெற்றவர்களின் உதவியோடு, கிறிஸ்தவ செபங்களையும், மறைக்கல்வியையும் மொழிபெயர்த்ததோடு, முதல் உபதேசியார்களையும் பயிற்றுவித்தார்.

தன்னுடைய பக்தி நிறைந்த வாழ்வினாலும், எளிமையினாலும் எண்ணற்ற ஆன்மாக்களை மீட்டெடுத்துக் கொண்டிருந்த புனிதரின் பொருட்டு கடவுள் பல்வேறு புதுமைகளை புரிந்தார். அவற்றில் முதன்மையானதும் முக்கியமானதுமாக பின்வரும் புதுமை இருந்தது. அகஸ்டின் பைவா மற்றும் அந்தோணி மிராண்டா என்ற இருசிறுவர்கள் அனுதினமும் புனிதருக்கு திருப்பலியில் உதவி செய்துவந்தனர். ஒருநாள் அதிகாலையில் அகஸ்டின் திருப்பலிக்கு சென்று கொண்டிருந்தபோது, வழியில் அந்தோணி வாயில் நுரைபொங்க கிடப்பதையும், அவனுக்கு அருகிலிருந்து விஷம் கொண்ட நாகப்பாம்பு ஒன்று அகன்று செல்வதையும் கண்டான். அந்தோணி பாம்பினால் தீண்டப்பட்டான் என்பதை உணர்ந்த அகஸ்டின், பயமும் பதட்டமும் நிறைந்தவனாக அந்தோணியை எழுப்ப முயற்சித்தான். ஆனால், பேச்சும்,



நினைவுமின்றி இறந்தவன் போல் கிடந்த அந்தோணியை கண்டு அச்சமுற்று, புனிதரிடம் விரைந்தோடினான் அகஸ்டின். புனிதரிடம் நடந்தவற்றை எடுத்துரைத்தான். செய்தியறிந்த புனிதர் உடனடியாக முழந்தாள்படியிட்டு விண்ணக நோக்கி கண்களை உயர்த்தியவாறாக எல்லாம்வல்ல கடவுளிடம் மன்றாடத் தொடங்கினார். என்னே அற்புதம்! புனிதரின் செபம் உடனடியாக கேட்கப்பட்டது. பாம்பின் விஷத்தால் தாக்குண்டு இறந்தவன் போல் கிடந்த அந்தோணி உடனடியாக எழுந்து அமர்ந்தான். நினைவு திரும்பியவனாக எழுந்து நடந்து வந்து புனிதருக்கு திருப்பலியில் உதவிபுரிந்தான். நடந்த அனைத்தையும் கண்ட மக்களுக்கு புனிதரின் மீதான மரியாதையும், அன்பும் பெருகியது. இங்ஙனம், புனிதம் நிறைந்த சிலுவை மரமும், இறையருள் பெற்ற புனிதரின் பிரசன்னம் அவ்விடத்தில் புனித சிலுவை ஆலயம் ஏற்பட காரணமாயிருந்தன. கி.பி. 1581ஆம் ஆண்டு அப்பகுதியில் இருந்த ஒரே பங்கு ஆலயமான, 'அன்னை மரியாள் விண்ணக அரசி' என்ற ஆலயத்தின் பங்கு குருவான அருட்பணி. ஜான் தே சலனோவா அவர்களின் பொருள் உதவியால் புனித சிலுவை ஆலயம் கட்டப்பட்டது.

ஆலயம் கட்டிமுடிக்கப்பட்டவுடன் கி.பி. 1583ஆம் ஆண்டில், அருட்பணி. ஜான் அவர்கள், இந்த ஆலயத்தில் உண்மையான திருச்சிலுவையின் திருப்பண்டம் இருப்பது சாலச்சிறந்தது எனக்கருதி, அந்நாளைய இயேசுசபை அதிபர் அருட்பணி. ஆக்குவாவிவா அவர்கள் வழியாக உரோமை தலைமைப்பீடத்திற்கு கோரிக்கை ஒன்றை அனுப்பினார். அக்கோரிக்கையை கனிவுடன் ஏற்ற அந்நாள் திருத்தந்தை 13ஆம் கிரகோரி அவர்கள் திருச்சிலுவையின் புனிதப்பண்டத்தை கப்பல் மூலம் கொச்சினுக்கு அனுப்பினார். அந்நாட்களில், தென்னிந்தியா மற்றும் சிலோனுக்கு கொச்சின்தான் இலத்தீன் ரீதி கிறிஸ்தவர்களுக்கு தாய் திருஅவையாக விளங்கியது. இந்தியா வந்த திருச்சிலுவையின் திருப்பண்டத்தை கொச்சின் ஆயர் மேதகு, மேத்தியூ தே மெதினா அவர்கள் தகுந்த மரியாதையுடன் வரவேற்று, கொச்சினில் மூன்று நாட்கள் ஆராதனைக்காக வைத்தார். பின், மிகுந்த ஆடம்பரத்துடனும், பக்தியுடனும் திருப்பண்டமானது மலபார் கடற்ரை ஊர்கள் வழியாக பவனியாக கொண்டு செல்லப்பட்டு, திருச்சிலுவை மகிமையுடன் உயர்த்தப்பட்ட திருவிழாவிற்கு சில நாட்கள் முன் மணப்பாடு வந்தடைந்தது. அருட்பணி. ஜான் மற்றும் ஊர் மக்கள் அனைவரும் எல்லையில்லா உவகையடைந்து பக்தி பரவசத்துடன் திருப்பண்டத்தை பெற்று, ஆலயத்தில் வைத்தனர். எல்லா பகுதிகளிலிருமிருந்தும் பக்தர்கள் சாரை சாரையாய் வரத்தொடங்கினர்.

திருப்பண்டம் பல ஆண்டுகள் மணப்பாட்டில் இருந்தாலும், அங்கு ஆண்டவரின் புனித காயங்களின் சகோதர குழுமம் ஏற்பட்ட பிறகே திருச்சிலுவை விழா வெகுவிமரிசையாகக் கொண்டாட ஆரம்பிக்கப்பட்டது.





# மரியா - கடவுளின் கடிதம்

25

அருள்பணி. லூர்துசாமி ம.ஊ.ச.
நவதுறவியர் இல்லம், மாமல்லபுரம்.



**மரியா வணக்கத்தின் மையம் இயேசு**

மரியா பற்றி இரண்டாம் வத்திக்கான் சங்கம் வழங்கும் படிப்பினையின் இன்னொரு முக்கிய பண்பு அதன் கிறிஸ்து மையத்தன்மையாகும். சங்கத்திற்கு முன்பு குறிப்பாக, 18-ம், 19-ம் நூற்றாண்டுகளிலும், 20-ம் நூற்றாண்டின் முதல் பகுதியிலும் வளர்ந்திருந்த மரியா வணக்கமும் சிந்தனையும் பெருமளவு மரியாவை மையமாகக் கொண்டு அவரது சிறப்புக்களை சொல்வதிலேயே அவரது தனி உரிமைகளையும் பெருமைகளையும் பறைசாற்றுவதிலேயே கருத்தாக இருந்தன. இயேசு இன்றி மரியாவுக்கு சிறப்பில்லை என்ற விவிலிய கண்ணோக்கு மங்கி நின்றது. மகனுடன் போதிய அளவு தொடர்பு காட்டப்படாமலே மரியா தானாக தனியாக தன்னிலேயே பல மரியியல் சிந்தனைகளும் வணக்கங்களும் வளர்ந்து விட்டிருந்தன.

இவ்வாறு விசுவாச மையத்தலிருந்து விலகிவிட்ட இத்தகைய மரியா பற்றிய சிந்தனைகளையும் வணக்கங்களையும் மனதில் கொண்டு இரண்டாம் வத்திக்கான் சங்கம் அவற்றின் முதலும் முடிவும் மையமும் இயேசு கிறிஸ்துவே என வலியுறுத்துகிறது. "மக்கள்பால் தூய கன்னி மரியா கொண்டுள்ள மீட்பளிக்கும் செல்வாக்கு அனைத்தும்... கிறிஸ்துவினுடைய பேறுபலன்களில் நிறைப் பெருக்கத்திலிருந்து வழிகின்றது. முற்றிலும் அப்பணியைச் சார்ந்தே இருக்கின்றது. அதிலிருந்தே தன் ஆற்றல் அனைத்தையும் பெறுகின்றது."(திருச்சபை 60) "தூய கன்னியின் அலுவல்களிலும் உரிமையும், உண்மை, புனிதத்தன்மை, இறைப்பற்று என்பவை அனைத்தின் ஊற்றான கிறிஸ்துவையே நாடி நிற்பவையாகும்."(திருச்சபை 67)

எனவே வத்திக்கான் சங்கப் பார்வையில் மரியாவின் பண்புகள் எல்லாம் இயேசுவின் பண்புகளின் பரிமணிப்புதான் அவளது பணிகள் இயேசுவின் பணிகளின் பங்கேற்புதான். அவளது வாழ்வும் சிறப்பும் இயேசுவையே மையமாகக் கொண்டவை. அவருக்கு நாம் செய்யும் வணக்கமும் இயேசுவின் மேல் நாம் கொள்ளும் அன்பின் விளைவுகளே. இதனால் இயேசுவை மையமாக கொண்டிராத அவரிடம் இட்டுச் செல்லாத அவர் வழி வாழ்வதற்கு உதவாத எந்த மரியா வணக்கமும் பக்தியும் போலியானதே, தவறானதே.

**மரியா திருஅவையின் மாதிரி**

விவிலியப் பார்வையில் மரியாவை காண விழையும் இரண்டாம் வத்திக்கான் சங்கம் அவளை இயேசுவின் தலைச் சிறந்த சீடத்தியாகவும்



# பிளாரென்ஸ் நகரத்து முத்திப்பேறு ஜோவான்னா

O S M



அருட் சகோ. பிலிப் ஜோஸப் ம.ஊ.ச

பிளாரென்ஸ் நகரத்து முத்திப்பேறு ஜோவான்னா நமது சபை தொடங்கிய அதே பதிமூன்றாம் நூற்றாண்டில்தான் பிளாரென்ஸ் நகரத்தில் சோதரிணி (Soderini) என்கிற உயர்வர்க்க பணக்கார குடும்பத்தில் பிறந்தார். இந்த பிளாரென்ஸ் நகரம் இந்த நூற்றாண்டில் எத்தகைய பெருமையை மற்றும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்ததை நாம் புரிந்துகொள்ள வேண்டும் என்றால், இக்கால நியூயார்க் நகரத்தோடு இதை ஒப்பிடலாம். நம்முடைய இந்த நூற்றாண்டில் எவ்வாறு வணிகத்திற்கு நியூயார்க் நகரம் இன்றியமையாததோ, அதைப்போல பிளாரென்ஸ் நகரமும் அக்காலத்தில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. இதனுடைய பணத்தின் மதிப்பை வைத்துதான் மற்ற அனைத்து முக்கிய வணிக நகரங்களின் பணம் மதிப்பிடப்பட்டது. இத்தகைய செல்வம் செழித்தோங்கிய நகரத்தை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தவர்கள் இரு உயர்வர்க்க குடும்பத்தை சார்ந்தவர்கள்: மேதிச்சி (Medici) என்கிற குடும்பம் மற்றும் சோதரிணி (Soderini) என்கிற குடும்பம். இத்தகைய பெருமை வாய்ந்த குடும்பத்தைச் சார்ந்த முத்திப்பேறு ஜோவான்னா நம்முடைய ஏழு புனிதர்களின் வாழ்க்கையின் மாற்றத்தையும் அவர்களின் புனிதத்தையும் கேட்டறிந்து வியப்புற்றார். இவர்களின் இந்த புனித பாதையில் தானும் இயேசுவை பின்பற்ற ஆசைகொண்டு மரியின் ஊழியர் பெண்கள் சபையில் சேர்ந்தார். அந்த கன்னியர் மடத்தில், புனித ஜூலியான இல்ல தலைவியாக இருந்தார். நம்முடைய ஜோவான்னாக்கு, இவரின் புனித வாழ்க்கையை கண்டு, கிறிஸ்துவை பின்பற்றும் விருப்பம் அதிகரித்தது. புனித ஜூலியானாவின் வழிநடத்துதலில் தன் வாழ்வை முழுமையாக இறைவனுக்கு அர்ப்பணித்தார். எவ்வாறு திருத்தூதர்கள் இறைவேண்டலிலும் அப்பம் பிடுவதிலும் மற்றவர்களுக்கு உதவுவதிலும் கருத்தாய் இருந்தார்களோ அதுபோலவே, புனித ஜூலியானாவும், முத்திப்பேறு ஜோவன்னாவும் இறைவேண்டலில் நிலைத்திருந்தனர். இதனால் முத்திப்பேறு ஜோவன்னாவின் பல நேரங்களில் இவ்வாறு கூறுவது வழக்கம்: "ஆண்டவரே, நான் ஒன்றுமில்லாதவள், என்னால் எதுவும் செய்ய இயலாது. நான் உங்களின் அடிமை, என் வழியாக நீங்கள் எல்லாம் செய்யுங்கள்". புனித ஜூலியானா இறந்தபின், பெண் துறவிகளை தன் இறுதி நாள் வரை ஆன்மிகத்தில் வழிநடத்தினார். நம்முடைய புனிதர்களின் ஆன்மிகத்தை அடுத்த தலைமுறைக்கு எடுத்து சென்றதில் முத்திப்பேறு ஜோவன்னாவிற்கு பங்கு உள்ளது. 1367 ஆம் ஆண்டு செப்டம்பர் 1 ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார். 1828 ஆம் ஆண்டு திருத்தந்தை ஏழாம் சிங்கராயர் இவருக்கு முத்திப்பேறு பட்டம் அளித்தார்.





இக்குழுமமானது, கி.பி. 1725ஆம் ஆண்டு பெப்ரவரி 25ஆம் திருத்தந்தை 13ஆம் பெனடிக்ட் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டு, அதே ஆண்டு மே 28ஆம் தேதி இவ்வாலயத்தில் இச்சகோதர குழுமம் தொடங்கப்பட்டது. அவ்வாண்டிலிருந்து, வெகுவிமரிசையாக திருச்சிலுவை விழாவானது கொண்டாடப்பட்டு வருகிறது. தொழில் மற்றும் பல்வேறு காரணங்களுக்காக வெளியூர்களிலும், வெளிநாட்டிலும் வசிக்கும் இக்கிராம மக்கள் இவ்விழாவிற்கு தங்கள் ஊருக்கு வருவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள்.

ஆலயத்தின் மையப்பீடத்தின் மேல் அலங்கரிக்கும் அற்புதமான வடிவமைப்பும் அழகும், கருணையும் நிறைந்த திருச்சிலுவை எங்கிருந்து கொண்டுவரப்பட்டது என்பது குறித்து பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன, அவற்றில், இச்சிலுவையானது, பனிமய அன்னை திருச்சுரூபத்தோடு கொண்டுவரப்பட்டது என்கிற கருத்து நிலவுகிறது. ஆனால் அக்கருத்து சரியல்ல. ஏனென்றால், கி.பி. 1570ஆம் ஆண்டு வரை மணப்பாட்டில் ஒரு ஆலயமோ அல்லது குருவோ இல்லை. ஆனால், இச்சிலுவையானது மணிலாவிலிருந்து வந்திருக்க வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. ஏனென்றால், கி.பி 1521ஆம் ஆண்டு பெர்தினாந்தோ மெகெல்லன் என்கிற கப்பல் தலைவர், அன்னையின் திருஉருவம், குழந்தை இயேசுவின் திருஉருவம் மற்றும் திருச்சிலுவையையும் பிலிப்பைன்ஸ் நாட்டிலுள்ள செபூ தீவிற்கு கொண்டு வந்து, அங்கு முதன்முதலில் கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்ட தீவின் தலைவரான மூபோன் என்பவருக்கு வணக்கத்திற்காக வழங்கினார். அக்குழந்தை இயேசு சுரூபம் இன்றும் அங்குள்ள அகுஸ்தீனியன் ஆலயத்தில் உள்ளது. அன்னையின் திருஉரவமானது அங்குள்ள அகுஸ்தீனியன் பெண்துறவுமடத்தில் உள்ளது. அதன் பிரதியே கி.பி. 1555ஆம் ஆண்டு தூத்துக்குடிக்கு கொண்டுவரப்பட்டது. பின்னாளில், அருட்பணி. ஜான் அவர்களின் பெருமுயற்சியால், அவ்விடத்தில் இருந்த திருச்சிலுவையின் பிரதியானது மணப்பாடு ஆலயத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்க வேண்டும் என்பது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்தாக நிலவுகிறது.

இங்ஙனம், பழமையும், பாரம்பரியமும் வாய்ந்த புனித சிலுவை கடற்கரையில் வானுயர்ந்து நின்று, காண்போர் அனைவருக்கும் கலங்கரை விளக்காய் அமைந்துள்ளது. புனிதப்பண்டம் பாதுகாக்கப்படும் ஆலயம், புனிதரின் குகை, குகையில் அமைந்துள்ள நன்னீர் கிணறு ஆகியவை இன்றும் இறைவனின் அருட்கருணையின் வெளிப்பாடாய் அமைந்துள்ளன என்பதில் எள்ளவும் ஐயமில்லை. முத்துக்குளித்துறை கடற்கரை முழுவதும் காணப்படுகின்ற பழமையான ஆலயங்கள், கிறிஸ்தவத்தின் வேர்களின் சாட்சிகளாய் உள்ளன. ஆலயம் என்பது கட்டிடம் மட்டும் அல்ல, மாறாக, அங்கு வாழ்ந்த ஒவ்வொரு விசுவாசியின் விசுவாசத்தின் வெளிப்பாடு என்பதை உணருவோம், வாழ்வாக்குவோம்.



திருப்பயணம் தொடரும்..........

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி
## தொடக்க நூல் 1-25



ச. பெ. அமல்ராஜ். ம.ஊ.ச.பொ.நி, திருச்சி - 21

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | | | | | | | | | 4 |
| | 9 | | | | | | | 7 | |
| | | 12 | | | | | 11 | | |
| | | | | | | 14 | | | |
| | | | 16 | | | | | | |
| | | | | | 15 | | | | |
| | | 13 | | | | | | | |
| | 8 | | | | | | 10 | | |
| | 6 | | | | | | | 5 | |
| 2 | | | | | | | | | 1 |

**வலமிருந்து இடம்**

1) கடவுள் வானத்திற்கு 'விண்ணுலகம்' என்று பெயரிட்டார். மாலையும் காலையும் நிறைவுற்று ............... நாள் முடிந்தது.
4) காகம் ஒன்றை வெளியே ............அது மண்ணுலகில் வெள்ளம் வற்றும் வரை போவதும் வருவதுமாக இருந்தது.
5) நோவாவின் வாழ்க்கையின்............ஆண்டின் இரண்டாம் மாதத்தில் பதினேழாம் நாளன்று பேராழத்தின் ஊற்றுகள் எல்லாம் பீறிட்டெழுந்தன. வானங்களின் மதகுகள் திறக்கப்பட்டன.
7) நெகேபிலிருந்து பெத்தேல் வரை படிப்படியாகப் பயணம் செய்து பெத்தெலுக்கும் .......... இடையே முதலில் தம் கூடாரம் இருந்த அதே இடத்தை அடைந்தார்.
10) ஆபிரகாமிடமிருந்தே வலிமைமிக்க மாபெரும............ தோன்றும்.
11) அப்பொழுது ஆண்டவரின் தூதர் வானத்தினின்று 'ஆபிரகாம்! ஆபிரகாம் என்று கூப்பிட, அவர் 'இதோ! ............ என்றார்.
14) உனக்காகக் கோபர் மரத்தால் ஒரு பேழை செய்: அதில் ............ அமைத்து அதற்கு உள்ளேயும் வெளியேயும் கீல் பூசு.
15) காயினைக் கண்டு பிடிக்கும் .......... அவனைக் கொல்லாமல் இருக்க ஆண்டவர் அவன் மேல் ஓர் அடையாளம் இட்டார்.

**இடமிருந்து வலம்**

2) அவர் ............உன் மனைவியின் சொல்லைக் கேட்டு, உண்ணக்கூடாது என்று நான் கட்டளையிட்டு விலக்கிய மரத்திலிருந்து நீ உண்டதால் உன் பொருட்டு நிலம் சபிக்கப்பட்டுள்ளது:
3) மனிதரின் புதல்வியர் அழகாக இருப்பதைத் தெய்வப் புதல்வர் கண்டு, தாங்கள் தேர்ந்து கொண்டவர்களையெல்லாம் ............ ஆக்கிக்கொண்டனர்.





பொறுப்பாளிகள் என்கிறார் எசேக்கியேல் இறைவாக்கினர். தனி மினதனின் பொறுப்பு பற்றி இன்றைய முதல் வாசகம் எடுத்துரைக்கின்றது. நன்மை செய்பவன் நன்மையையும் தீமை செய்பவன் தீமையையும் தமக்கு தாமே ஏற்படுத்திக் கொள்கிறான் என்கின்றது இவ்வாசகம். எனவே தீமையை விடுத்து நன்மை செய்து நன்மை பெற வேண்டி இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**இரண்டாவது வாசக முன்னுரை**

இயேசு கிறிஸ்துவில் இருந்த மனநிலையே உங்களிலும் இருப்பதாக என்று பவுல் இன்றைய வாசகத்தில் வேண்டுகின்றார். கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவை அணிந்து கொண்டவர்கள். அவர்கள் கிறிஸ்துவாக வாழ வேண்டும். கிறிஸ்து அன்பும், தாழ்ச்சியும் உடையவராக வாழ்ந்தார். கிறிஸ்தவர்களும் கிறிஸ்து போன்றே வாழ்வது கடன். இதுவே கிறிஸ்தவ மறையின் சுருக்கம். புனித பவுல் போல கிறிஸ்துவின் மனநிலை கொண்டு வாழ்ந்திட அருள் வேண்டுவோம்.

**மன்றாட்டுக்கள்**

1. அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் இறைவனது திருவுளத்தை அறிந்து இயேசுவைப் போல அவ்விருப்பத்தை அனுதின வாழ்வில் வாழ்வாக்கிட இறை ஞானம் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
2. அன்பின் இறைவா , எங்களது அனுதின கிறிஸ்தவ விசுவாச வாழ்வில் பிறருக்கு நன்மையையும் நீதியான செயல்களையும் செய்து உமது அருளையும், உமது அன்பையும் நிறைவாக பெற்றிட வரம் தர வேண்டுமென்று இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.
3. அன்பின் இறைவா எங்களது விசுவாச வாழ்வில் கிறிஸ்துவின் தாழ்ச்சியையும் அவரது பரிவையும் வாழ்வாக்கி அதன் வழியாக உமது மாட்சிமையால் முழுமையாக பங்கு பெற அருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
4. அன்பின் இறைவா, எங்களது அரசியல் சமய மற்றும் சமூக தலைவர்கள், தங்களது வார்த்தைக்கும் செயல்களுக்கும் ஒன்றோடு ஒன்று இணைந்து செயல்படவும் அதன் வழியாக செயல்பாடு மிக்க தலைவர்களாக வாழ்ந்திடவும் அருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

உமது மீட்பையும், முழுமையாக பெற்றிட வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. அன்பின் இறைவா, எங்கள் அனுதின வாழ்வில் எங்களுக்கு எதிராக தீமை செய்தவர்களை நாங்கள் மன்னித்து அவர்களை எங்களது சகோதர, சகோதரிகளாக ஏற்று வாழ அருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அன்பின் இறைவா, திருமுழுக்கு என்னும் அருட்சாதனத்தின் வழியாக கிறிஸ்தவ வாழ்வு வாழ அழைக்கப்பட்டுள்ள நாங்கள் ஒவ்வொருவரும் , கிறிஸ்துவில் , கிறிஸ்துவோடு கிறிஸ்துவுக்காக வாழ்ந்திட அருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## பொதுக்காலம் 26 ஆம் ஞாயிறு (01.10.2023)

எசே 18 :25-28 பிலி 2:1-11 மத் 21:28-32

### முன்னுரை

இறையேசுவில் அன்பார்ந்த இறைமக்களே, நம்மில் பலருக்கு கடவுள் பிரச்சனையாக இருப்பதில்லை. மாறாக, கடவுளால் படைக்கப்பட்ட மனிதர்கள்தான் பிரச்சனையாக அமைகிறார்கள். குறிப்பாக நமக்குத் தொல்லைகளைத் தருபவர்கள், துன்பம் விளைவிப்பவர்கள் நமக்கு பிரச்சனைகளாக அமைவதாக உணர்கின்றோம். இது நமது கிறிஸ்தவ வாழ்விற்கு மாறானது. நாம் கடவுளை அடைய விரும்பினால் நமக்கு அருகாமையில் இருக்கும் மனிதரை அன்பு செய்ய வேண்டும். அவர்களுக்கு உதவ வேண்டும்.

கடவுளின் விருப்பம் நாம் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிய வேண்டும் அவர் சொல்வதைக் கேட்க வேண்டும். கேட்பதை வாழ்வாக்க வேண்டும். இதுவே இயேசுவின் பணிவாழ்வின் வெளிப்பாடு. இயேசு தந்தைக்கு கீழ்ப்படிந்து, அவரது வார்த்தையை ஏற்று அதை வாழ்வாக்கினார். நாமும் அத்தகைய வாழ்வை வாழ இன்றைய வழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கின்றது. திருப்பலியில் "ஆமென்" என்று சொல்லிக் கிறிஸ்துவின் உடலை உட்கொள்ளும் நாம் ஒவ்வொருவரும் அன்றாட வாழ்வில் ஒவ்வொரு நிகழ்விலும் இறைவனுக்கு ஆமென் என்று சொல்லி இறைவிருப்பத்தை செயல்படுத்தி இறையரசை இவ்வுலகில் கட்டி எழுப்பிட இறையருள் வேண்டி இத்திருப்பலியில் பங்கு பெறுவோம்.

### முதல் வாசக முன்னுரை

நாம் ஆறறிவு படைத்தவர்கள், நாம் செய்யும் காரியங்களை அறிந்தே செய்கிறோம். எனவே நம் செயல்களுக்கு நாமே





6) எகிப்தின் புதல்வர்: லூதிம், …………, இலகாபிம், நப்துகிம்,
8) 14:15 அவரும் அவர் ஆள்களும் அணிஅணியாகப் பிரிந்து இரவில் அவர்களைத் தாக்கித் தோற்கடித்தனர். தமஸ்குக்கு வடக்கே ………. ஓபாவரை அவர்களைத் துரத்திச் சென்றனர்.
9) உங்கள் அடியானுக்கு உங்கள் பார்வையில் இரக்கம் கிடைத்துள்ளது. என் உயிரைக் காக்கும் பொருட்டு நீர் காட்டிய பேரன்பு உயர்ந்தது. ……….. மலையை நோக்கித் தப்பியோட என்னால் இயலாது. ஓடினால் தீங்கு ஏற்பட்டு, நான் செத்துப்போவேன்.
12) இவ்வாறு மக்பேலாவில், மம்ரே அருகில் எப்ரோனுக்குச் சொந்தமான நிலமும், அதிலிருந்த குகையும், நிலத்திலும் ………… எல்லையைச் சுற்றிலும் இருந்த எல்லா மரங்களும்
13) அவர் புதல்வர்களாகிய ஈசாக்கும் இஸ்மயேலும் மம்ரே நகருக்குக் கிழக்கே இத்தியனான சோவாரின் மகன் எப்ரோனுடைய நிலத்தில் இருந்த மக்பேலா குகையில் அவரை………… செய்தனர்.
16) கடவுள் அவருக்குக் கட்டளையிட்டபடி உள்ளே சென்றவை எல்லாம் ஒவ்வோர் உயிரினத்திலும் ………… பெண்ணுமாக உள்ளே சென்றன.

**மேலிருந்து கீழ்**

3) கேனானுக்கு எழுபது வயதான போது, அவனுக்கு ………….. பிறந்தான்.
4) ஆண்டவர் அவர்களை ………… உலகம் முழுவதிலும் சிதறுண்டுபோகச் செய்ததால் அவர்கள் நகரைத் தொடர்ந்து கட்டுவதைக் கைவிட்டனர்.
7) ………… அங்கிருந்து புறப்பட்டு, பெத்தேலுக்குக் கிழக்கே இருந்த மலைப்பக்கம் சென்று பெத்தேலுக்கு மேற்கே ஆயிக்குக் கிழக்கே கூடாரம் அமைத்துக் குடியிருந்தார்.
9) ………… ஆபிராமுக்கு இஸ்மயேலைப் பெற்றெடுத்த பொழுது அவருக்கு வயது எண்பத்தாறு.
11) பின்பு அவள் முன்புறம் சென்று அம்புஎறி தூரத்தளவில் உட்கார்ந்து கொண்டாள். 'குழந்தை சாவதைப் பார்க்கச் சகியேன்' என்று கூறி, முன்புறமிருந்து கொண்டே கூக்குரலிட்டு …………..
12) உடனே……….. குடியுங்கள் ஐயா' என்று விரைந்து தம் குடத்தை தோளினின்று இறக்கி அவருக்குக் குடிக்கக் கொடுத்தார்.
14) பெண் அதன் பழத்தைப் பறித்து உண்டாள். அதைத் தன்னுடனிருந்த தன் கணவனுக்கும் கொடுத்தாள். ……….. உண்டான்.

**கீழிருந்து மேல்**

1) பின்பு ஆண்டவராகிய கடவுள்,'மனிதன் தனிமையாக ……. நல்லதன்று: அவனுக்குத் தகுந்த துணையை உருவாக்குவேன்' என்றார்
2) நீ மண்ணில் பயிரிடும் பொழுது அது இனிமேல் உனக்குப் பலன் தராது. ……… நீ நாடோடியாக அலைந்து திரிவாய்' என்றார்.
5) நடமாடி உயிர்வாழும் ……….. உங்களுக்கு உணவாகட்டும். உங்களுக்குப் பசமையான செடிகளை உணவாகத் தந்தது போல இவை எல்லாவற்றையும் தருகிறேன்.
8) வானத்தை நிமிர்ந்து பார். முடியுமானால், விண்மீன்களை எண்ணிப்பார். இவற்றைப் போலவே உன் வழிமரபினரும் ………… என்றார்.
10) மேலும். உண்மையில் ……….என் சகோதரியே: இவள் என் தந்தைக்குப் பிறந்த மகள். ஆனால் என் தாயின் மகள் அல்ல: அவளை நான் மணந்து கொண்டேன்.

விடைகள் அனுப்ப இறுதி நாள் 25-09-2023

# வங்கக் கரையோரம் ⑤



கலைச்சுடர் முனைவர். ஜோ. விண்ணரசன், மேல்வழி

எந்தன் துயர் சொல்லி அழ வந்தேன்
உந்தன் யெர் சொல்லி தொழ வந்தேன
வங்கக் கரையோரம் வந்தமர்ந்த எழிலே
பொங்கும் வரைக்கானா வரமருளும் பொதிவே
எந்தன் துயர் சொல்லி அழ வந்தேன்
உந்தன் பெயர் சொல்லி தொழ வந்தேன்

ஆசை என்னும் கடலில்
அவன் விரித்த வலையில
வசமாக நான் விரும்பி
மாட்டிக் கொண்டேன்
ஆழம் என்றும் அறியாமல்
அகலம் என்றும் புரியாமல்
அலங்கார புதைக் குழிக்குள்
சிக்கிக் கொண்டேன்
கரம் பிடித்து இழுப்பாய்
கரை யதிலே சேர்ப்பாய்
வினை தீர்க்கும் விடையல்லவா- என்
விடுதலையின் தாயல்லவா

பாசம் எனும் இழையில்
பசப்பும் துன்ப மொழியில
வேசம் என்று தெரியாமல
மோசம் சென்றேன
காசு பணம் இவைதான்
கடவுள் என்று நம்பி
வீசும் உண்மை உறவுகளை
இழந்து நின்றேன்
உண்மையினை உரைப்பாய
பொய்மையினை தகர்ப்பாய
மெய் உறவும் நீதானம்மா- எனை
கை விடாமல் காப்பாயம்மா





அவர் எல்லோருக்கும் தந்தை எல்லோரும் மீட்படைய வேண்டுமென்று அவர் விரும்புகிறார்.

அத்தகைய மீட்பை நாம் பெற மனம் மாற்றம் பெற வேண்டும் என்றும், இத்தகைய இரக்கத்தை தம்மிலே கொண்டிருக்கும் இறைவனிடம் வர வேண்டும் என்று இன்றைய வழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கின்றது. நமக்குக் கிடைக்கும் மீட்பு பிறருக்கும் கிடைப்பதைக் கண்டு நாம்மகிழவும் இன்றைய இறைவார்த்தை நமக்கு அழைப்பு விடுக்கின்றது. எனவே புனித பவுலை போல நமது அனுதின வாழ்வில் நாமும் இறைவனால் ஆட்கொள்ளப்பட்டு, கிறிஸ்துவுக்காக வாழ்ந்து அவரது இரக்கத்தில் அவருக்குரிய மக்களாக வாழ அருள் வேண்டி இத்திருப்பலியில் பங்கு பெறுவோம்.

**முதல் வாசக முன்னுரை**

அந்நிய நாட்டில் அடிமை வாழ்வு வாழ்ந்த இஸ்ரயேல் மக்கள் நாளடைவில் தம் ஒரே ஒப்பற்ற கடவுளை மறந்து சிலை வழிபாட்டில் ஈடுபட்டனர். இந்நிலையில் எசாயா இறைவாக்கினர் கடவுளின் இரக்கத்தையும் பேரன்பையும் அம்மக்களுக்கு அறிவித்து மனம் மாற்றம் பெற்று இறைவனது மன்னிப்பை பெற அழைப்பு விடுக்கும் இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**இரண்டாவது வாசக முன்னுரை**

கிறிஸ்துவுக்காக உடனே மரணத்தைத் தழுவுவது அல்லது மக்களுக்காக மேலும் உழைப்பது என்ற இருநிலைகளையும் சமமாக நோக்கும் பவுலின் இறைஞானத்தை இன்றைய இரண்டாவது வாசகம் நமக்கு உணர்த்துகிறது. வாழ்வென்பது கிறிஸ்து என்ற பவுலின் கூற்று, கிறிஸ்துவுக்கும், கிறிஸ்தவனுக்கும் உள்ள நெருங்கிய உறவை சுட்டிக்காட்டுகின்றது. எனவே புனித பவுலைப் போல கிறிஸ்துவில், கிறிஸ்துவோடு வாழ்ந்திட இறையருள் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**மன்றாட்டுகள்**

1. அன்பின் இறைவா, எம் திருத்தந்தை ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் கிறிஸ்துவின் இரக்கத்திற்கும் அவரது பேரன்பிற்கும் உகந்த மக்களாக வாழ அருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. அன்பின் இறைவா, உமது நீதி, இரக்கத்தை அடித்தளமாக கொண்டுள்ளது என்பதை உணர்ந்து நாங்கள் எங்களது பழைய பாவ வாழ்வை விட்டுவிட்டு மனம் மாற்றம் பெற்று , உமது இரக்கத்தயும்,

என்பதை இன்றைய 2 வது வாசகம் நமக்கு எடுத்துரைக்கின்றது. தவறிழைப்பது மனிதத்தன்மை, மன்னிப்பது தெய்வத்தன்மை என்பதை உணர்ந்து, நமது பகைவர்களை மன்னித்து கிறிஸ்துவின் சாட்சிகளாக வாழ இறை இரக்கம் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1. அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், மற்றும் பொதுநிலையினர் அனைவரும் கிறிஸ்துவின் அன்புக்கட்டளையை வாழ்வாக்கி பகைவர்களையும் எதிரிகளையும் மன்னித்து, இறைவனது இரக்கத்தையும் மன்னிப்பையும் முழுமையாக பெற்றிட அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. அன்பின் இறைவா, வறுமையினாலும், ஏழ்மையினாலும், சூழ்நிலையினாலும் தவறு செய்தவர்கள் தங்களது தவறை உணர்ந்து மனம் மாறி உமது இரக்கத்தையும் மன்னிப்பையும் பெற அருள் புரிய இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. அன்பின் இறைவா, எங்களது அனுதின வாழ்வில் நாங்கள் ஒவ்வொருவரும் நீதிமான்போல் பிறருக்கு தீர்ப்பிடாமல், இரக்கத்தின்பால் எல்லோரையும் மன்னித்து வாழும் மனதிடத்தை எங்களுக்கு அருள இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அன்பின் இறைவா, தங்களது குற்றத்தின் நிமித்தமாக சிறையில் இருக்கின்ற கைதிகள், உமது இரக்கத்தையும், மன்னிப்பையும் பெறவும் அவர்களது குடும்பங்கள் உமது பாதுகாப்பையும், உமது அருளையும் பெறவும் வரம் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**பொதுக்காலம் 25 –ஆம் ஞாயிறு (24.09.2023)**

**எசா 55 :6-9 பிலி 1:20 , 24-27 மத் 20:1-8**

**முன்னுரை**

இறையேசுவில் அன்பார்ந்த இறை மக்களே, இன்றைய இறைவார்த்தை வழிபாடு இறைவனின் அளவில்லா அன்பு நிறைந்த நீதியை குறித்து பேசுகின்றது இறைவன் இரக்கமும் கனிவும் உடையவர் எல்லாருக்கும் நன்மை செய்பவர். தான் உண்டாக்கிய அனைத்தின் மீதும் இரக்கம் காட்டுபவர் என்று இன்றைய இறைவார்த்தை நமக்கு அறிவுறுத்துகின்றது. மேலும் கடவுளின் நீதி இரக்கத்தை உள்ளடக்கிய ஒன்றாக உள்ளது. கடவுளின் நீதி வேறு, மனித நீதி வேறு. மனித நீதி சட்டத்தை அடிப்படையாக கொண்டது. கடவுளின் நீதி இரக்கத்தை அடிப்படையாக கொண்டது. கடவுளிடம் ஒரு தலைச் சார்பு கிடையாது.





# ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன்

அருள்பணி. ஆனந்த் லூர்துராஜ் ம.ஊ.ச,
அமலோற்பவ மாதா ஆலயம், பூம்பொழில்நகர்.



**பொதுக்காலம் 23 –ஆம் ஞாயிறு (10.09.2023)**

**எசே 33:7-9 உரோ 13:8-10 மத் 18:15-20**

**முன்னுரை**

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த 21 வது நூற்றாண்டில் மனித இனம் பல துறைகளில் பிரம்மிப்பூட்டும் அளவுக்கு வளர்ந்து இருந்தாலும் மனிதன் சாதியால், சமயத்தால், நிறத்தால், மொழியால் பிரிந்து கிடக்கின்றான். இவ்வாறு மக்களின் மனங்களிலே வெறுப்பையும் வன்முறையையும், பொறாமையையும், பழிபாவங்களையும், பல வடிவங்களில் விதைக்கும், வளர்க்கும், மக்களைப் பிரிக்கும் சக்திகள் அதிகரித்துக் கொண்டே போகின்றன. பிரிந்து கிடப்போரின் எண்ணிக்கையும் பெருகிக் கொண்டே தான் இருக்கின்றன. மக்களிடையே மன்னிப்பும், உறவும், ஒற்றுமையும் குறைந்து கொண்டே வருகின்றன. ஆனால் இத்தகைய சூழ்நிலையில்தான் குறிப்பாக கிறிஸ்தவர்களாகிய நாம் நம்மை சுற்றி வாழும் அனைத்து மக்களோடும் ஒற்றுமையைக் கட்டியெழுப்ப வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம் என்பதை இன்றைய இறை வார்த்தை வழிபாடு நமக்கு கற்பிக்கின்றது.

மன்னிப்பு, அன்பு மற்றும் இரக்கம் ஆகியவற்றின் மூலம் ஒற்றுமைக்கு சான்று பகர்வது என்பது கிறிஸ்தவர்களாக வாழ்வதற்கான ஒரே அடிப்படை அடையாளமாகவே இருக்கின்றது என்பதை நாம் உணர்வது அவசியம். கிறிஸ்து இயேசுவோடு இணைந்துள்ள நீங்கள் யாவரும் ஒன்றாய் இருக்கிறீர்கள் என்று பவுல் அடிகளார் கூறியுள்ளதை போல நாமும் ஒன்றாய் வாழ்வோம். அவ்வாறு வாழ வேண்டும் என்பது இன்றையை காலக்கட்டத்தின் அவசியத் தேவையாக உள்ளது. அதே வேளையில் கிறிஸ்தவரின் உண்மையான அடையாளமாகவும் இருக்கிறது. எனவே அன்பு, மன்னிப்பு , இரக்கம் ஆகிய நற்குணங்களை பெற்று வாழ அருள் வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**முதல் வாசக முன்னுரை**

இன்றைய முதல் வாசகம் ஆலயம் இறைவனுக்கு வழிபாடு செய்வதற்கு மட்டுமே உரித்தான ஒன்றல்ல, மாறாக அது மக்களை ஒன்றிணைத்து அவர்களிடையே உள்ள வேற்றுமைகளைக் களைந்து, ஒற்றுமையை வளர்க்கும் ஆதாரமாகவும் உள்ளது என்பதை உணர்த்துகிறது. இறைவார்த்தையை ஏற்று மனம் மாறி ஒற்றுமையோடு வாழ்பவன் இறைவனது இரக்கத்தைப் பெறுவான் என்று கூறும் இம்முதல் வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

சீனாய் மலையில் யாவே மோசேக்கு அளித்த பத்துக் கட்டளைகள், கடவுளுக்கும் மனிதனுக்கும் இருக்க வேண்டிய பிணைப்பையும், சமுதாயத்தில் மனிதர்களுக்கு இடையே இருக்க வேண்டிய நெருங்கிய இணைப்பையும் எடுத்துரைக்கின்றன. இறைவனது அன்புக் கட்டளையின் நோக்கமெல்லாம் நம்மிடையே ஒற்றுமை நிலவ வேண்டும் என்பதே. எனவே அன்பு கட்டளைகளை வாழ்வாக்கி எல்லோரும் இணைந்து வாழ அருள் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1. அன்பின் இறைவா, எம் திருத்தந்தை ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் பொது நிலையினர் அனைவரும் இறைவனது அன்புக் கட்டளையை வாழ்வாக்கி ஒன்று இணைந்த திருஅவையாக இவ்வுலகில் வலம் வர இறையருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. அன்பின் இறைவா , கிறிஸ்தவர்களாகிய எங்களிடையே இருக்கின்ற பகைமை உணர்வையும் இன வேறுபாடுகளையும் களைந்து ஒற்றுமையோடும் சகோதரத்துவத்தோடும் வாழ அருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. அன்பின் இறைவா, நாங்கள் எங்களுக்கு எதிராக குற்றம் செய்பவர்களை மன்னிக்கவும் தங்களது கடமைகளை தவறுபவர்களிடம் நேர்மையாக அவர்களது தவற்றை சுட்டிக்காட்டிடவும் தேவையான மன வலிமையையும் அருளையும் பொழிந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அன்பின் இறைவா, நாங்கள் எங்களது அனுதின வாழ்வில் உமக்கும், எங்கள் அயலாருக்கும் எதிராக செய்த தவறுகளுக்கு மனம் வருந்த, மனமாற்றம் பெற்று , உம்மோடும் எங்கள் அயலாரோடும் ஒப்புரவாக்கி ஒற்றுமையோடு வாழ தேவையான அருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்





**பொதுக்காலம் 24 ஆம் ஞாயிறு (17.09.2023)**

**சீ ஞா 27:30-28:7 உரோ 14:7-9 மத் 16:21-35**

**முன்னுரை**

இறையேசுவில் அன்புக்குரியவர்களே, கடவுளின் தனிப்பண்பைப் பற்றி இன்றைய பதிலுரைப் பாடல் பின்வருமாறு கூறுகிறது. "ஆண்டவர் இரக்கமும் அருளும் கொண்டவர், பொறுமையும் பேரன்பும் உள்ளவர். அவர் நம் குற்றங்களை எல்லாம் மன்னிக்கின்றார்". கடவுள் உலகினரின் குற்றங்களைப் பொருட்படுத்தாமல் கிறிஸ்துவின் வாயிலாக அவர்களை தம்மோடு ஒப்புரவாக்கவே தமது மகனை கடவுள் இவ்வுலகிற்கு அனுப்பினார் என்கிறார் புனித பவுல் அடிகளார். எனவே கடவுள் நம் பாவங்களுக்கு ஏற்றபடி நம்மைத் தண்டிக்கவில்லை. கடவுள் நம் குற்றங்களை கணிக்காமல் நம்மை மன்னித்தார் என்றால் நாமும் பிறருடைய குற்றங்களைப் பொருட்படுத்தாமல் மனமார மன்னிக்க வேண்டுமென்பது இன்றைய இறைவார்த்தையின் மையக்கருத்தாகும்.

கடவுள் மனிதனை மன்னிப்பதையும், மனிதன் மனிதனைப் பொறுப்பதில்லை என்பதையும் இன்றைய நற்செய்தி படம் பிடித்து காட்டுகின்றது. நமது பரந்த மனப்பான்மையை வைத்தே நாம் எவ்வளவு தூரம் இறையன்பின் மன்னிப்பை உணர முடியும் என்பதனை அறிந்து கொள்வோம். உளவியல் வல்லுநர்கள் சொல்வர், நீ முதலில் உன் மனதை வெறுமையாக்கு , அப்பொழுதுதான் உன்னால் பிறருடைய அன்பை முழுமையாக ஏற்க முடியும் என்று. எனவே இறைவனது அளவற்ற அன்பையும் , அவரது மன்னிப்பையும் நாம் முழுமையாக பெற பிறரை நாம் மன்னிக்க வேண்டும். பிறரை மன்னிப்போம். இறைவனது இரக்கத்தை பெறுவோம்.

**முதல் வாசக முன்னுரை**

ஒரு மனிதன் மன்னிப்பதின் வழியாக எவ்வாறு இறைவனுக்கு ஏற்புடையவனாகிறான் என்பதை இன்றைய முதல் வாசகம் உணர்த்துகிறது. இறைவனின் மன்னிப்பிற்கும் இரக்கத்திற்கும் எல்லையில்லை எனினும், அவை நமக்குக் கிடைக்க வேண்டுமானால் நாமும் இரக்கம் கொண்டு மன்னிக்க வேண்டும். நமது பகைவர்களை முழு மனத்துடன் மன்னித்து, கடவுளின் இறைமன்னிப்பின் முழுமையை பெற அருள் வேண்டி இம்முதல் வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

இயேசு எப்படி மன்னிப்பின் முழுமுதல் உதாரணமாக சிலுவையில் மரித்து தனது மன்னிப்பின் , அன்பின் முழுமையை வெளிப்படுத்தியுள்ளார்